வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 19.09.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 283 | பக்கங்கள் : 12




# அமெ. ஜனாதிபதியை சந்திக்கின்றார் ரணில்

## பல தலைவர்களுடனும் முக்கிய பேச்சு

கொழும்பு, செப்ரெம்பர் 19

**அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உட்பட பல நாட்டுத் தலைவர்களுடன் உத்தியோகபூர்வமற்ற சந்திப்புகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்தவுள்ளார் என அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.**

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

2030 நிகழ்ச்சி நிரலுக்கான அமைதி, சுபீட்சம், முன்னேற்றம் மற்றும் நிலைபேற்றுத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மீண்டும் உருவாக்குதல் என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த ஆண்டு கூட்டத்தொடர் இடம்பெறவுள்ளது.

இதில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அதிகாலை நியூயோர்க் நகரைச் சென்றடைந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செப்ரெம்பர் 21ஆம் திகதி கூட்டத் தொடரில் பங்கேற்று, தனது விசேட உரையை ஆற்ற உள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின்

11

# தலைமன்னார் - கொழும்பு இடையே சொகுசு ரயில் சேவை மிகவிரைவில்!

கொழும்பு, செப். 19

தலைமன்னார் துறைமுகத்துக்கும் கொழும்பு கோட்டைக்கும் இடையில் புதிய ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ரயில் தலைமன்னார் துறைமுக ரயில் நிலையத்தில் இருந்து அதிகாலை 4.15 மணிக்குப் புறப்பட்டு 10.34 மணிக்கு கோட்டை நிலையத்தை அடைந்து மாலை 3.35 மணிக்கு கோட்டையிலிருந்து புறப்பட்டு இரவு 10.48 மணிக்கு தலைமன்னார் துறைமுகத்தை சென்றடையுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ரயில்வே துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

இந்த ரயிலில் குளிரூட்டப்பட்ட இரண்டு முதல் வகுப்பு பெட்டிகள், இரண்டு இரண்டாம் வகுப்பு முன்பதிவு செய்யப்பட்ட இருக்கை பெட்டிகள் மற்றும் இரண்டாம், மூன்றாம் வகுப்பு சாதாரண பெட்டிகள் உள்ளன என்று தெரிவித்தார். (அ)

# கஜேந்திரன், பிரேமரத்ன எம்.பிக்களின் சம்பவங்களை சமமாக கணியுங்கள்

## டிரான் அலசிடம் மனோ கோரிக்கை

கொழும்பு, செப். 19

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீது திருகோணமலையில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தையும், பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன மீதான அநுராதபுரம் துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தையும் ஒரே மாதிரியான சட்டம், ஒழுங்கு பிரச்னையாக கருதி, விசாரித்து

11

# கனடா கண்டனம்

கொழும்பு, செப். 19

திருகோணமலையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு கனடா கடுமையான கண்டனம் வெளியிட்டுள்ளது.

திருகோணமலையில் திலீபனின்

11

# கஜேந்திரன் எம்.பி. மீது தாக்குதல் கைதாகிய ஆறு பேரும் மறியலில்!

திருமலை, செப். 19

திருகோணமலை, சர்தாபுர பகுதியில் தியாகி திலீபனின் உருவப்படம் தாங்கிய நினைவூர்திமீது தாக்குதல் நடத்தியதுடன் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 14 பேரை தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட அறுவரும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதிவான் அண்ணாத்துரை தர்ஷினி முன்னிலையில் நேற்று குறித்த சந்தேக நபர்கள் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் சீனன்குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனை

11

# யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் முடிவுக்கு எதிர்ப்பு

கொழும்பு, செப். 19

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தில் கைபேசி பயன்படுத்தக்கூடாது என, வைத்தியசாலை பணிப்பாளர் விடுத்துள்ள அறிவிப்புக்கு அரச தாதியர் சங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

வைத்தியசாலை பணிப்பாளரின் அறிவித்தலுடன் உடன்பட முடியாதென்றும், அந்த அறிவிப்பை மீளபெறுமாறும் வலியுறுத்தியுள்ளது.

அரச தாதியர் சங்கத்தின் செயலாளர் அஜித் ரத்நாயக்க கையொப்பமிட்டு இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி, தாதியர்களின் கைபேசி பாவனை நேரடியாகப் பாதித்துள்ளதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

11

# ஈஸ்டர் தாக்குதலின் உண்மையை இப்போது ரணிலும் மறைக்கிறார்!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 19

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவைப் பின்பற்றி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான உண்மையை தற்போதைய அரசும் மறைத்து வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சி ஒன்றியத்தின் வாராந்த செயல் குழுக் கூட்டம் நேற்று பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் கூடிய போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்து பேசிய அவர்,

முழுமையான உண்மையைத் தேடுவதே எதிர்க்கட்சியின் நோக்கம் என்றும், அரசாங்கம் உண்மைகளையும் தரவுகளையும் மறைப்பதால், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தமக்கும் சரியான உண்மைகள் தெரியாது என்பதனால், இது

11

# தாக்குதலில் ஈடுபட்டோர் மீது சட்ட நடவடிக்கை வேண்டும்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 19

பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது முழுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளில் ஒன்றான புளொட் தலைவர் த. சித்தார்த்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் கண்டத்துக்குரியது. மரணித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதை தடுக்கும் இனவாத கலாசாரம் கண்டிக்கப்பட வேண்டியது.

அரசாங்கம் இனப்பிரச்னை தீர்வு,

11

# உயர்தர பரீட்சை ஒத்திவைப்பு?

கொழும்பு, செப். 19

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருந்த 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சையை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கும் தீர்மானம் ஏற்கனவே கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தனது முகப்புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

'ஜி-77 மற்றும் சீன அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக கியூபாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பான முடிவுகள் இறுதி செய்யப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (அ)

# உலக வங்கித் தலைவரை சந்தித்த ஜனாதிபதி ரணில்

கொழும்பு, செப். 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலக வங்கியின் தலைவர் அஜய் பங்காவை சந்தித்து ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

ஐ. நா. சபை தலைமையகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஐ. நா. பொதுச் சபையின் அனுசரணையில் ஐ.நா தலைமையகத்தில் நடைபெற்ற நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளுக்கான உச்சிமாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க இணைந்து கொண்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் இந்த மாநாடு நடைபெற்றுள்ளது.

(அ)

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது

இலங்கையை சர்வதேச நாணய நிதியம் இரண்டாவது கார் விபத்துக்கு தயார்படுத்துகிறதா?

இப்படியொரு கேள்வியை அமெரிக்கரின் புகழ்பெற்ற பொருளாதார தினசரியான பினான்சியல் 'ரைம்ஸ்' பத்திரிகை எழுப்பியுள்ளது.

உலகளாவிய இறையாண்மை ஆலோசனை (Global Sovereign Advisory) நிறுவனம் ஒன்றின் பொருளியல் நிபுணரான தியோ மரெற் என்ற பொருளியலாளர் ஒருவர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே இந்தக் கேள்வியை அவர் கேட்டிருக்கிறார்.

சில வருடங்களுக்கு முன்னர் கிரீஸ் நாடு பொருளாதார நெருக்கடியில் திவாலாகியபோது அந்த நாட்டை தூக்கி நிமிர்த்தியதில் முக்கிய பங்குவகித்தது இந்த 'உலகளாவிய இறையாண்மை ஆலோசனை' நிறுவனம் என்பது கவனிக்கத்தக்கது.

சர்வதேச நாணய நிதியத்துக்கு இலங்கை சார்பில் கையளிக்கப்பட்ட ஆவணத்தை முன்னிலைப்படுத்தி அவர் எழுதியுள்ள அந்தக் கட்டுரையில், 'இலங்கையின் அடிப்படைப் பிரச்னையானது வரலாற்று ரீதியாக அதன் குறைந்த வரிகளை வசூலிக்கும் திறன் ஆகும். இலங்கையின் இயல்புநிலைக்கு முந்தைய தசாப்தத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருவாய் சராசரியாக 11.5 சதவீதமாக இருந்தது - மேலும் தொற்றுநோய்க்கு சற்று முன்னர் தவறான ஆலோசனை வரிக் குறைப்புக்கு பிறகு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதத்துக்கும் கீழே குறைந்துள்ளது. ஐ. எம். எவ். திட்டம் இப்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவிகிதம் வருவாய் உயரும் என்று கணித்துள்ளது - மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100 சதவிகிதத்துக்கும் அதிகமான பொதுக் கடன்களை கொண்ட அத்தகைய நாட்டுக்கு அந்த வருவாய் மிகக்குறைந்த அளவானது.

இலங்கையின் கடனுக்கான 5 சதவீத சராசரி வட்டி வீதம் மற்றும் கடனுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 100 சதவீதமாக இருக்கும் என நீங்கள் கருதினால், அதன் வருவாயில் மூன்றில் ஒரு பங்கு வட்டிக்கு மட்டுமே போதுமானது.

இத்தகைய நிலையில் நாட்டில் மீண்டும் ஒரு கார் விபத்து ஏற்படுவதை ஐ. எம். எவ். தயார்படுத்துகிறதா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை என்கிறார் கட்டுரையாளர்.

இதுவல்ல இன்று இந்தப் பத்தியில் நாம் சொல்ல வருவது. இது பற்றி ஆய்வு செய்வது பொருளாதார வல்லுநர்களின் வேலை. ஆனால், நாம் இங்கே சொல்ல வருவது, நாட்டில் பொருளாதார நிலைமை மேம்படுவது போல தென்பட்டாலும் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதால் மீண்டும் ஓர் அறகலய ஏற்படுவதை தடுக்கமுடியாது என்றும், அப்படி ஏற்பட்டால் அது முன்னரைவிட பல மடங்கு பெரியதாக இருக்கும் என்றும் அண்மையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்திருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இதுபற்றி இந்தப் பத்தியிலும் குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், சந்திரிகா அம்மையார், மீண்டும் அறகலய பற்றி நேற்று முன்தினம் பிரஸ்தாபித்திருக்கிறார்.

'அரசமைப்பின் சட்டமாகக் காணப்படும் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறே தற்போது ஜனநாயக முறையில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்கள் கோருகிறார்கள். இருப்பினும் இதனை சிலர் ஒருபுறம் தள்ளி வைத்துள்ளனர். அதனை ஏன் செயல்படுத்த முடியாது? 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் சில விடயங்கள் உள்ளன. அதனை நடைமுறைப்படுத்த விரும்புவதாக ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் என்னிடமும் கேட்டுக்கொண்டார்.' என்று தெரிவித்துள்ள சந்திரிகா, 'அது மிகப்பெரிய விடயமல்லவா? 'அறகலய' போராட்டக் காலத்தில் 13இற்கும் அப்பால் சென்றும் தீர்மானங்களை எடுத்திருக்கலாம். நானாக இருந்திருந்தால் அதைச் செய்திருப்பேன். தற்போது 13ஐ நடைமுறைப்படுத்த வேண்டிய உண்மையான தேவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது. இது தொடர்பில் சிறந்த புரிந்துணர்வும் அவருக்கு உள்ளது' - என்றும் கூறியிருக்கிறார்.

இதன்மூலம் அவர் சொல்ல வருவது, அறகலய காலத்தில் நாடு அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தபோது இனப்பிரச்னைக்கு தீர்வு காண்கின்ற வேலையை செய்திருக்கலாம் என்பதே. அந்த அறகலய காலத்தில் பல்வேறு நல்லிணக்க முயற்சிகள் நடந்ததையும் நாம் கண்டோம். முள்ளிவாய்க்கால் படுகொலையை அவர்கள் நினைவுகூர்ந்தது ஓர் உதாரணம்.

மீண்டும் ஓர் அறகலய ஏற்படுவதை தவிர்க்க முடியாது என்று சந்திரிகா மட்டுமன்றி சர்வதேச பொருளியலாளர்களும் கூறத் தொடங்கியுள்ள இந்த வேளையில், அப்படியொரு நிலைமை மீண்டும் ஏற்பட்டால் அதனை சரியாக பயன்படுத்திக்கொள்ள இப்போதே எம்மை நாம் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.!

**- ஊர்க்குருவி.**

# சஞ்சீவ புரிந்த 18 கொலைகள்?

கொழும்பு, செப். 19

90 நாள் தடுப்புக் காவலில் விசாரிக்கப்பட்டு வரும் சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரரும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்தவருமான கணேமுல்ல சஞ்சீவ என்பவரின் 28 தோட்டாக்களுடன் கூடிய ரி-56 துப்பாக்கி மீட்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

அங்கொட பரக்கும் மாவத்தையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் துப்பாக்கி மீட்கப்பட்டது.

மேல்மாகாண வடக்கு குற்றப்பிரிவின் பொலிஸ் குழு நேற்று முன் தினம் காலை சம்பவ இடத்திற்கு வந்து துப்பாக்கி மற்றும் தோட்டாக்களைக் கண்டெடுத்துள்ளது.

இவை பயணப் பையில் வைக்கப்பட்டு பாதுகாப்பாக அடைக்கப்பட்டிருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற பல கொலைகளுக்கு இந்த துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும், அதனை உறுதிப்படுத்தும் வகையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் கணேமுல்ல சஞ்சீவ இதுவரை நடத்திய 18 கொலைகள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. இதேவேளை, கணேமுல்ல சஞ்சீவ நேபாளத்திலிருந்து இலங்கை வரும் போது, தனது கையடக்க தொலைபேசியை விமானத்துக்குள்ளேயே விட்டுள்ளார். அந்த தொலைபேசியும் மீட்கப்பட்டு, குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள தரவுகள் அழிக்கப்பட்டுள்ளதால், அவற்றை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சஞ்சீவ தற்போது மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அரசியல் தொடர்புகளை கொண்ட ஒருவர் மற்றும் கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவரிடமும் அவருக்கு பாதுகாப்பு கிடைத்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சஞ்சீவ அரசியல்வாதிக்கு சில வேலைகளை செய்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதால், அது குறித்தும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

# யாழ். மாநகர சபையின் அறிவித்தல்!

யாழ்ப்பாணம், செப். 19

நல்லூர் பெருந்திருவிழா காலத்தில் தவறவிடப்பட்டு மாநகர சபையின் பணிமனையில் ஒப்படைக்கப்பட்ட பொருட்களை உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களை காட்டிப் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் இ. த. ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில்,

நடைபெற்று முடிந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழா காலத்தில் பக்தர்களால் தவறவிடப்பட்ட பெறுமதி வாய்ந்த பொருட்கள், ஆவணங்கள், வங்கிப் பரிவர்த்தனை அட்டைகள், பணப் பைகள், மணிக்கூடு தேசிய அடையாள அட்டை, திறப்புகள் என்பன யாழ். மாநகர சபையின் உற்சவ காலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டு தற்போது மாநகர சபை பணிமனையில் உள்ளன.

இவற்றின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் உரிய உறுதிப்படுத்தி மாநகர சபையின் நிர்வாக கிளையில் பிற்பகல் 2 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை பெற்றுக் கொள்ள முடியும் என்றுள்ளது. (ஐ)

# கட்டட நிர்மாணத்துறையின் பின்னடைவை தவிர்ப்பதற்கு ஜனாதிபதிக்கு முன்மொழிவு

கொழும்பு, செப். 19

கட்டட நிர்மாணத் தொழிற்துறையில் ஏற்படும் பின்னடைவைத் தவிர்ப்பதற்கு அவசியமான 13 முன்மொழிவுகளை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த தெரிவித்துள்ளார்.

முன்னதாக, நிர்மாணத்துறை தொடர்பில் ஆராய அமைச்சுக்களின் செயலாளர்கள் தலைமையில் ஆறு குழுக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்தார்.

அந்தக் குழுக்களின் மூலம் யோசனைகள் கோரப்பட்டிருந்த நிலையில், அதற்காக 50 முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவற்றில் 13 அவசர முன்மொழிவுகள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

அத்துடன், 2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு திட்டத்தில், நிர்மாணத்துறை எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கான தீர்வுகளை முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்தியானந்த கூறினார். (அ)

# பொலிஸாரின் நடவடிக்கை தமிழர், சிங்களவர் என்ற மனநிலையிலேயே காணப்படுகின்றது!

## கஜேந்திரன் மீதான தாக்குதலுக்கு சந்திரகுமார் கண்டனம்

கொழும்பு, செப். 19

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் பொலிஸார் முன்னிலையில் சில ரௌடிகளால் தாக்கப்படும்போது பொலிஸார் நடந்துகொண்டவிதம் மிகவும் கண்டனத்திற்குரியது என முன்னாள் பாராளுமன்ற சமத்துவ கட்சியின் பொது செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

செல்வராசா கஜேந்திரன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினர், அவர் இந்த நாட்டின் ஓர் உயர்ந்த சபையின் கௌரவ உறுப்பினர் அவரை தெருவில் ஒன்று கூடிய சில ரௌடிகள் சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொலிஸாரின் முன்னிலையில் தாக்குவது என்பது மிகவும் காட்டுமிராண்டித்தனமான செயல்.

தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவருக்கே இந்த நிலைமை என்றால் இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலைமை எப்படியிருக்கும்? வன்முறைகளை தடுத்து சட்டத்தை நிலைநிறுத்தவேண்டிய பொலிஸார் அந்த இடத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காது இருந்தது என்பது தமிழ் மக்கள் விடயத்தில் அவர்களின் நிலைப்பாட்டை அப்பட்டமாக காட்டி நிற்கிறது. இதுதான் இந்த நாட்டின் நிலைமை, தமிழ் மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு கஜேந்திரன் மீதான தாக்குதல் சம்பவம் என்பது ஒரு நல்ல உதாரணம்.

நினைவேந்தலுக்கான உரிமை வழங்கப்பட்டிருந்த நிலையில் அதனை மேற்கொள்ளவிடாது வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமன்றி மக்கள் பிரதிநிதி ஒருவரை வீதியில் விரட்டி விரட்டி தாக்குபவர்கள் மீதும் அந்த தாக்குதல் சம்பவத்தை கட்டுப்படுத்தாது நின்ற பொலிஸார் மீதும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது.

ஈழநாடு
Eelanadu
19.09.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# உண்மையை விழுங்கும் ரணில்

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் 117ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவித்திருக்கின்றார். தேசத்தின் சமூக, பொருளாதார தொலைநோக்கில் ஜே. ஆரின் புரட்சிகரமான தாக்கம் – என்னும் தலைப்பில் ரணில் தன் அபிப்பிராயங்களை பகிர்ந்திருக்கின்றார். ஜே. ஆரினால் முன்னெடுக்கப்பட்ட சமூக, பொருளாதார தொலைநோக்குத் திட்டம் பாதுகாக்கப்பட்டிருந்தால் இலங்கைத் தீவு அபிவிருத்தி அடைந்திருக்குமென்று தெரிவித்திருக்கும் ரணில் – கலவரம் பயங்கரவாதம் ஆகிய காரணங்களால் ஜே.ஆரினால் முன்னெடுக்கப்பட்ட தொலைநோக்கு தத்துவம் வெற்றியடைவது தடுக்கப்பட்டுவிட்டதாக குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜே.ஆரினால் முன்னெடுக்கப்பட்ட திறந்த தாராளவாத பொருளாதாரக் கொள்கை தொடர்பிலேயே ரணில் கூறுகின்றார். ஆனால், அந்த தொலைநோக்கு வெற்றி பெறாமைக்கான காரணமாக கூறப்படும் விடயங்களில்தான் சிக்கல் உண்டு. ஏனெனில், ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பொருளாதார கொள்கை தோல்வியடைந்தமைக்கு ஜே. ஆரின் அரசியல் நிலைப்பாடே பிரதானமானது.

தேசிய இனப்பிரச்னையை முற்போக்கான நிலையில் தீர்ப்பதற்கு ஜே. ஆர். முயற்சிக்கவில்லை. தமிழ் இளைஞர்களின் அரசியல் தலையீட்டை வெறும் பயங்கரவாத பிரச்னையாகவே முன்னிலைப்படுத்தினார். அந்த அடிப்படையில் அவர்களை அழிப்பதன் மூலம் பிரச்னைகளை தீர்க்க முடியுமென்று நம்பினார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இந்தியாவின் தலையீடு நிகழ்ந்தது. ஆனால், ரணிலோ, கலவரம் மற்றும் தீவிரவாதம் போன்ற பிரச்னைகளால்தான் ஜே. ஆரின் பொருளாதார தொலைநோக்கு வெற்றிபெறவில்லை என்று கூறுவதானது முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைப்பதற்கு ஒப்பானது.

1983இல் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட இனக்கொலை நோக்க தாக்குதல்களை ஜே. ஆர். அரசாங்கம் தடுப்பதற்கு முயற்சிக்கவில்லை. மாறாக வேடிக்கை பார்த்தது. அதே வேளை, அப்போதிருந்த தமிழ் மிதவாத தலைமைத்துவத்தை நேர்மையுடன் அணுகி பிரச்னைகளை தீர்க்க முயற்சிக்கவில்லை. அமிர்தலிங்கத்தின் தலைமைத்துவத்துடன் பேசி பிரச்னைகளை தீர்த்திருக்கலாம். அதற்கான வாய்ப்பு மிகவும் சாதகமாகவே இருந்தது. ஆனால், ஜே. ஆர். இதயசுத்தியுடன் முயற்சிக்கவில்லை.

ஒரு நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களை ஒடுக்குமுறைக்குள் வைத்துக்கொண்டு அந்த நாடு – எவ்வாறு பொருளாதார தொலைநோக்கை வெற்றிகொள்ள முடியும். தமிழ் மக்களின் பிரச்னையை முளையிலேயே முறையாக கையாண்டிருந்தால் இலங்கையின் பொருளாதாரம் இன்று மோசமானதொரு நிலையை அடைந்திருக்காது. ஆனால், இப்போதும் உண்மையான காரணங்களை விடுத்து பொய்களுக்குள் மூழ்கிக் கொள்ளவே முயற்சிக்கின்றனர். இதன்மூலம் ஒருபோதுமே முன்னோக்கி பயணிக்க முடியாது. வெறும் தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டே சுதந்திரத்துக்குப் பின்னரான அனைத்து கட்சிகளும் செயல்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையில் மாற்றங்களை ஏற்படுத்தவல்ல சிங்கள தலைவர் ஒருவரை இதுவரையில் நாடு காணவில்லை. ரணில் விடயங்களை கையாளக்கூடியவர் என்றவாறான கருத்துண்டு. ஆனால், ரணிலிடமிருந்தும் சுயவிமர்சனம் சார்ந்த பார்வை வெளிவருவதாக தெரியவில்லை.

# சிறுபான்மை சமூகங்கள் மீது அடக்குமுறைகள் ஓயவில்லை!

## கஜேந்திரன் எம். பி. மீதான தாக்குதலுக்கு ரிஷாத் கண்டனம்

*கொழும்பு, செப். 19*

*பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதான தாக்குதலை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் வன்மையாகக் கண்டித்துள்ளார்.*

*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-*

*சிறுபான்மை சமூகங்கள் இன்னும் அடக்குமுறைக்குள் இருப்பதையே இந்தத் தாக்குதல் வெளிப்படுத்துகிறது. சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால், சிறுபான்மை மக்களின் நிலை எப்படியிருக்கும்?*

*பேரினவாதக் கும்பலின் அட்டகாசங்களுக்கு சிறுபான்மை மக்கள் பலியாவது அல்லது அவமானப்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இவற்றைச் செய்யாமல் சமூக ஐக்கியம் எங்கே வரப்போகிறது?*

*பொலிஸாருக்கு முன்பாக இவ்வாறான அடாவடித்தனங்கள் இடம்பெறுவது சட்டவாட்சியை கேலிக்கூத்தாக்குகின்றது. சட்டத்தின் ஆட்சியை பேரினவாதக் கும்பல் கையிலெடுக்கும் நிலைமைகள் ஒழிக்கப்படாத வரை, சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பே கிடையாது. அரசியல் உரிமைகளை உணர்வு ரீதியாக மதிக்கவும் இடமில்லாத இந்த ஆட்சியில், நாம் எந்த நம்பிக்கையில் வாழப்போகிறோம்?"- என்றுள்ளது. (அ)*

# புதிய அதிபர் நியமனத்துக்கு எதிராக தாராபுரத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

*மன்னார், செப். 19*



*தாராபுரம் அல்மினா மகா வித்தியாலயத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிபருக்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்களால் அப்பாடசாலைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.*

*இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்" குறித்த பாடசாலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெறுபேறுகள் தொடர்சியாக சரிவு நிலையில் காணப்படுவதாகவும், பாடசாலையின் பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்தி சங்கமும் தங்களது பதவிக் காலம் நிறைவடைந்தும் பாடசாலையின் நிர்வாகத்தில் தலையீடு செய்வதாகவும்" குற்றம் சுமத்தினர்.*

*அதே நேரம் அதிபர் தகுதியைப் பூர்த்தி செய்து நேர்முக தேர்வில் கலந்து கொண்ட தாராபுரம் கிராமத்தைச் சேர்ந்த அதிபரை நியமிக்குமாறும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.*

*அத்துடன், இது தொடர்பில் தாங்கள் எழுத்து மூல மகஜர் ஒன்றை உயர் அதிகாரிகளுக்கு கையளித்ததாகவும் குறித்த மகஜர் தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர். (அ)*

# சிமெந்து ரூ. 100ஆல் விலை உயர்வு


*கொழும்பு, செப். 19*

*சிமெந்து விலை மேலும் 100 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய நிர்மாணத்துறை சங்கத்தின் செயலாளர் சுபுன் அபேசேகர தெரிவித்தார்.*

*சிமெந்து விலை 300 ரூபாயால் குறைக்கப்படும் என வர்த்தக அமைச்சர் அறிக்கை வெளியிட்டபோதிலும், அதன் விலை மேலும் 100 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*சந்தையில் இரண்டாயிரத்து 100 ரூபாயாக காணப்பட்ட சிமெந்து மூடையொன்று, தற்போது, இரண்டாயிரத்து 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**செப்ரெம்பர் - 19 செவ்வாய்க்கிழமை**
**சோபகிருது வருடம் - புரட்டாதி 02**
**நல்ல நேரம் : 07.45 - 08.45**
**ராகு காலம் : 03.00 - 04.30**
**திதி : சதுர்த்தி**




**மேடம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். நன்மைகள் பல நடக்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனங்களுடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
புதிய முயற்சி யாவும் வெற்றியடையும். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கடகம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**சிம்மம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கை நிறைவேறும். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**விருட்சிகம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். லாபம் பெருகும்.

**மகரம்**
அனுபவ பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள்.வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மரியாதைக் கூடும்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டாம். உறவினர்களால் பகை உண்டாகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள்.

# பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை; இதுவே எங்களின் நிலைப்பாடு!

## அ. தி. மு. க. கட்சி அறிவிப்பு

சென்னை, செப். 19

“பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை. கூட்டணியை பொறுத்தவரையில், பா. ஜ. க., அ. தி. மு. க. கூட்டணியில் இல்லை. தேர்தல் வரும்போதுதான் அது குறித்து முடிவு செய்யப்படும். அதிமுக கூட்டணியில் பா. ஜ. க. இல்லை. இதுதான் எங்களுடைய நிலைப்பாடு. இனிமேல் அண்ணாமலை எங்களது தலைவர்கள் குறித்து விமர்சனம் செய்தால், கடுமையான விமர்சனங்களை அண்ணாமலை சந்திக்க நேரிடும்” என்று அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

சென்னை ராயபுரத்தில் அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு,

“ஒரு கூட்டணியில் இருந்து கொண்டு கூட்டணி தர்மத்தை மீறிப் பேசுகின்ற எந்த ஒரு செயலையும், கருத்தையும் தன்மானம் உள்ள அ. தி. மு. க. தொண்டன் எந்த நிலையிலும் ஏற்றுக் கொள்ளமாட்டான். சிட்டுக்குருவிக்கு பட்டம் கட்டினால், அது திமிர் பிடித்து ஆடும். வீட்டில் உள்ள பண்டபாத்திரங்களை எல்லாம் கொத்தும். சிட்டுக்குருவிகளுக்கே உள்ள புத்தி அது. அதுபோல், தகுதிக்கு மீறிய பதவி, அண்ணாமலை ஒரு ஐ. பி. எஸ். அதிகாரியாக இருந்து எதற்காக விருப்ப ஓய்வு பெற்றார் என்று எனக்கு தெரியாது. அங்கு சென்று கிளறினால் தான் இவரைப் பற்றி தெரியும்.

ஓர் அரசியல் தலைவருக்கே லாயக்கில்லாத - பா. ஜ. க. தலைவருக்கே லாயக்கில்லாத - சிறுமைபுத்தி கொண்ட - தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு அண்ணாமலை பேசி வருகிறார். அ. தி. மு. க. என்பது ஒரு சிங்கக் கூட்டம். அந்த சிங்கக் கூட்டத்தைப் பார்த்து, சிறு நரி அண்ணாமலை ஊளையிடுகிறது. ஊளையிடும் இந்த சிறு நரி தனியாக சென்று நிற்கட்டும். நோட்டாவுக்கு கீழே அண்ணாமலை வாக்குவாங்குவாரே தவிர, நோட்டாவைத் தாண்டமாட்டார். அப்படியிருக்கிறது அவருடைய செல்வாக்கு. பெரியார் குறித்து பேசுவதற்கு அண்ணாமலைக்கு என்ன தகுதி இருக்கிறது? அ. தி. மு. க. பொதுச் செயலாளர், ஜெயலலிதா, எம். ஜிஆர், குறித்துப் பேச என்ன தகுதி இருக்கிறது?

எனவே, தன்னை முன்னிலைப்படுத்துவதற்காக, எங்கு பார்த்தாலும், அண்ணாமலை வாழ்க என்று சொல்ல வேண்டும் என்பதற்காக ஒரு தோழமைக் கட்சி, கூட்டணிக் கட்சியை விமர்சனம் செய்து முன்னிலைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால், அதை ஒருகாலும் அ. தி. மு. க.தொண்டன் ஏற்றுக்கொள்ளமாட்டான்.

அண்ணாமலைக்கு பலமுறை எச்சரிக்கை கொடுத்தோம். அ. தி. மு. கவினர் திரண்டு எழுந்தால் நீங்கள் தாங்கமாட்டீர்கள். இனிமேல் அ. தி. மு. கவினர் அண்ணாமலையை விடமாட்டார்கள்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இருக்கிறோம் என்பதற்காக, இவரை திருத்த வேண்டும், இது போல அவரை பேச வேண்டாம் என்று கூறிவிட்டோம். கூட்டணியில் இருக்கும்போது அண்ணாமலை இவ்வாறு பேசினால், தேர்தல் நேரத்தில் எப்படி வேலை செய்வார்கள்? பா. ஜ. க. தொண்டர்கள் அ. தி. மு. கவுடன் கூட்டணி வைத்துக்கொள்ள விரும்புகின்றனர். ஆனால், அண்ணாமலை விரும்பவில்லை.

எனவே, பாஜகவுடன் கூட்டணி இல்லை. கூட்டணியைப் பொறுத்தவரையில், பா. ஜ. க. அ. தி. மு. கவின் கூட்டணியில் இல்லை. தேர்தல் வரும்போதுதான் அதுகுறித்து முடிவு செய்யப்படும். அ. தி. மு. க. கூட்டணியில் பா. ஜ. க. இல்லை. இதுதான் எங்களுடைய நிலைப்பாடு. இனிமேல் அண்ணாமலை எங்களது தலைவர்கள் குறித்து விமர்சனம் செய்தால், கடுமையான விமர்சனங்களை அண்ணாமலை சந்திக்க நேரிடும்” - என்றார். (ஐ)

# இலங்கை வரும் சீன உளவு கப்பலால் தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## பாட்டாளி மக்கள் கட்சி எச்சரிக்கை

சென்னை, செப். 19

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரவிருக்கும் ஷி யான் உளவுக் கப்பலுக்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று இலங்கை அரசை இந்தியா எச்சரிக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

“சீனாவிலிருந்து புறப்பட்டுள்ள ஷி யான் 6 என்ற உளவுக் கப்பல் அடுத்த மாதம் இலங்கையில் உள்ள கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களுக்கு வரவிருப்பதாகவும், அங்கு 17 நாட்கள் தங்கியிருந்து ஆராய்ச்சியில் ஈடுபடப் போவதாகவும் கிடைத்துள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

சீன உளவுக் கப்பலின் ஆராய்ச்சி என்பது தென் மாநிலங்களை உளவு பார்ப்பதுதான் என்பதால், இது தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு மிகப் பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. சீன உளவுக் கப்பல் ஷி யான் இரு நாட்களுக்கு முன் மலேஷியாவை அடுத்த மலாக்கா நீரிணைக்கு வந்து விட்டதாவும், அங்கிருந்து அக்டோபர் மாத இறுதியில் இலங்கையில் கொழும்பு, அம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களுக்கு வந்து சேரும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களுக்குள் நுழைய சீன உளவுக் கப்பலுக்கு இதுவரை அனுமதி அளிக்கப்படவில்லை என்றும், அதே நேரத்தில் அது தொடர்பான கோரிக்கை இலங்கை அரசின் ஆய்வில் இருப்பதாகவும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுவே ஒரு மோசடி.

இந்திய அரசின் அச்சுறுத்தலுக்கு அஞ்சித்தான் சீனக் கப்பலுக்கு அனுமதி அளிக்காதது போல இலங்கை அரசு காட்டிக் கொள்கிறது. ஆனால், கடைசி நேரத்தில் சீன உளவுக் கப்பலுக்கு இலங்கை அரசு கண்டிப்பாக அனுமதி அளிக்கும் என்று கூறப்படுகிறது. அவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டால், அது இந்தியாவுக்கு, குறிப்பாக தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும்.

ஷி யான் உளவுக் கப்பல் மிகவும் சக்தி வாய்ந்தது ஆகும். பல நூறு கிலோ மீற்றர் சுற்றளவில் உள்ள அனைத்து நிலைகளையும் செயற்கைக் கோள் உதவியுடன் உளவு பார்க்கும் திறன் இந்தக் கப்பலுக்கு உண்டு.

கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டாலும், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டாலும் அங்கிருந்து தமிழகத்தில் உள்ள கூடங்குளம், கல்பாக்கம் அணுசக்தி ஆராய்ச்சி மையங்களையும், சென்னை, தூத்துக்குடி உள்ளிட்ட தென்னிந்தியாவின் ஆறு துறைமுகங்களையும் எளிதில் உளவு பார்த்து, அது குறித்த தகவல்களையும் சேகரித்து விட முடியும். அணு சக்தி ஆராய்ச்சி நிலையங்கள் இந்தியாவின் பாதுகாப்புடன் எத்தகைய தொடர்பு கொண்டவை என்பதை அறிந்தவர்களால், சீன கப்பலின் இலங்கை வருகை எத்தகைய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

ஷி யான் கப்பலால் இந்தியாவுக்கு ஆபத்து இல்லை என்று இந்த அச்சுறுத்தலை கடந்து செல்ல முடியாது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலும் சீனாவுக்கு சொந்தமான யுவான் வாங் என்ற கப்பல் இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. அந்தக் கப்பலால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதையடுத்து, அக்கப்பல் அங்கிருந்து வெளியேற்றப்பட்டது. யுவான் வாங் 6 கப்பலால் இந்தியாவுக்கு எத்தகைய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்படுமோ, அதை விட மோசமான அச்சுறுத்தல் ஷி யான் கப்பலாலும் ஏற்படும் - என்றுள்ளது. (ஐ)

# நாணய நிதியத்தின் கடன் பாதகத்தையே ஏற்படுத்தும்

## இலங்கையர்களின் அச்சத்தை வெளிப்படுத்திய கருத்துக்கணிப்பு

கொழும்பு, செப். 19

**சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கிய 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை மோசமாக்கும் என 45 வீதமான இலங்கையர்கள் நம்புவதாக வெரிட்டி ரிசேர்ச் நிறுவனம் அண்மையில் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.**

ஆனால் சர்வதேச நாணய நிதிய கடன் இலங்கையின் பொருளாதாரத்தில் சாதகமான விளைவை ஏற்படுத்தும் என இலங்கை மக்களில் 28 வீதமான வர்கள் மாத்திரமே நம்புவதாக உண்மை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த கணக்கெடுப்புக்காக 1,008 பெரியவர்களின் மாதிரியை வெரைட் ரிசேர்ச் தேர்ந்தெடுத்துள்ளது. இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் நாட்டின் பொருளாதாரத்தை இப்போதும் எதிர்காலத்திலும் எவ்வாறு பாதிக்கும் என அவர்களிடம் கேட்கப்பட்டது. அந்த கருத்துக் கணிப்பு மாதிரியில் 5 தெரிவுகள் கொடுக்கப்பட்டன. அந்த 1008 பேர் அளித்த பதில்களின் படி கணக்கெடுப்பு முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த கணக்கெடுப்பு கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்டது. (அ)

# 17 பல்கலைக்கழகங்களில் இருந்து பகிடிவதை குறித்து 36 முறைப்பாடு



கொழும்பு, செப். 19

ஒரு வருட காலப்பகுதியில் நாட்டின் 17 பல்கலைக்கழகங்களிலிருந்து பகிடிவதை தொடர்பில் 36 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனை கூறினார்.

அத்துடன், பகிடிவதைச் சம்பவங்கள் தொடர்பில் 57 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பகிடிவதைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பதற்காக விசேட குழுவொன்று நிறுவப்பட்டுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ கருத்து தெரிவிக்கையில், பகிடிவதை தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க 076 54 53 454 என்ற வட்ஸ்அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன், இந்த தொலைபேசி இலக்கத்திற்கு போலியான தகவல்களை வழங்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். (அ)

# சர்வதேச நாணய நிதியத்துடன் புதிய உடன்படிக்கை கிடையாது

## கூறுகிறார் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

கொழும்பு, செப். 19

சர்வதேச நாணய நிதியத்துடன் புதிய உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்துடன் புதிய உடன்படிக்கைகள் எதுவும் இல்லை. வெளிநாட்டுக் கடன்களை மேம்படுத்தும் பணியும் விரைவில் நிறைவடையும்.

வெளிநாட்டுக் கடனை மேம்படுத்துவதற்கான அடிப்படைத் தேவையாக இருந்த உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் தற்போது முழுமையாக நிறைவடைந்துள்ளது.



எனவே வெளிநாட்டுக் கடன் மேம்படுத்தலும் விரைவில் நிறைவடையும் என எதிர்பார்க்கின்றோம். மேலும் ஜனாதிபதியின் வெளிநாட்டு விஜயம் நாட்டுக்கு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் மிகவும் முக்கியமான சந்தர்ப்பம்-என்றார். (அ)

# சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை உயர்வு!

கொழும்பு, செப். 19

சட்ட விரோதமான முறையில் தொழிலுக்காக வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சட்டவிரோதமாக தொழிலுக்குச் செல்ல முயற்சி செய்த இரண்டாயிரத்து 500 பேர் கைதான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா குறிப்பிட்டார்.

கடந்த வருடம், குறித்த எண்ணிக்கை ஆயிரத்து 900 ஆக காணப்பட்டது.

இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மோசடிகளுடன் தொடர்புடைய நூறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி செனரத் யாப்பா இதனைக் கூறினார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் இந்த வருடத்தில் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, அனுமதிப் பத்திரமின்றி வெளிநாட்டுக்கு பணியாளர்களை அனுப்பியமை தொடர்பிலும், தனிநபராக அல்லது குழுவாக வெளிநாட்டு தொழிலுக்கு அனுப்புவதாக தெரிவித்து பண மோசடியில் ஈடுபட்டமை தொடர்பிலும் ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் 100 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் தனிநபர்களாக, குழுக்களாக செயற்பட்ட 90 பேரும் அனுமதிப் பத்திரமின்றி வெளிநாட்டுக்கு பணியாளர்களை அனுப்புவதற்கு முற்பட்ட 9 நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப் பத்திரத்தை பெற்று தவறாக செயற்பட்ட நிறுவனமொன்றின் உரிமையாளரும் அதில் அடங்குவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்தார். (அ)

# பாடசாலை நேர அட்டவணையை இதுவரை வழமைக்குக் கொண்டு வர முடியவில்லை!

கொழும்பு, செப். 19

தற்போது காணப்படும் பாடசாலை நேர அட்டவணையை இதுவரையிலும் வழமைக்கு கொண்டு வர முடியவில்லை என இலங்கை அரச ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோது அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் செஹான் திசாநாயக்க இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது, பாடசாலை மாணவர்களுக்கு உரிய நேரத்தில் பரீட்சைகளை நடத்தவேண்டும்.

இந்த வருடத்துக்கான பாடத்திட்டம் அடுத்த வருடம் வரை கொண்டு செல்லப்படுகிறது.

இதன் காரணமாக பாடசாலை பரீட்சைகள் தாமதமாக நடத்தப்படுகின்றது.

முதல் முறை பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் இரண்டாவது முறையாகவும் பரீட்சைக்கு தோற்றுவார்களாயின் அவர்களுக்கு சிறிய இடைவேளை ஒன்று வழங்கப்படவேண்டும்.

பரீட்சைத் திணைக்களம் உரிய முறையில் பரீட்சைகளை திட்டமிட்டு நடத்தவேண்டும்.

இந்தநிலையில், மாணவர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்படும்-என்றார். (அ)

# மாதாந்தம் 100 பஸ் நடத்துநர்கள் பணியில் இருந்து இடைநிறுத்தம்

கொழும்பு, செப். 19

பல்வேறு மோசடிச் சம்பவங்கள் காரணமாக மாதாந்தம் 100 பஸ் நடத்துநர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அவர்களுக்கு பதிலீடாக புதிய பஸ் நடத்துநர்களை சேவையில் இணைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 381 பஸ் நடத்துநர்களை புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார்.

அதேநேரம், புதிதாக 912 பஸ் சாரதிகளையும் புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# ஹரக் கட்டாவுக்கு உதவிய கான்ஸ்டபிளின் தாய் கைது!

கொழும்பு, செப். 19

திட்டமிடப்பட்ட குற்றசெயல்களில் ஈடுபடும் ஹரக் கட்டா என்ற நதுன் சிந்தக்கவுக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து தப்பிச் செல்ல உதவி புரிந்து தற்போது தப்பியோடியுள்ள பொலிஸ் கான்ஸ்டபிளின் தாயும் அவரின் உறவினர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமறைவாகியுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

தலைமறைவாகியுள்ள குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பொலிஸ் கான்ஸ்டபிளை கைது செய்வதற்கான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான பின்னணியில் அவர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இருப்பினும் அது இதுவரையில் உறுதி செய்யப்படவில்லை.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் காவலில் உள்ள ஹரக் கட்டா, குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் பணம் வழங்கியுள்ளதாக இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் திருகோணமலை பகுதியில் அண்மையில் சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான நெற்காணியை கொள்வனவு செய்துள்ளார்.

அத்துடன் அதிகளவான பணத்தை தமது பெற்றோர் மற்றும் குடும்ப உறவினர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நாடாக இலங்கையை அறிவித்தது சட்டவிரோதம்

## புலனாய்வு விசாரணைகளை நடத்த கோரிக்கை

**இலங்கையை பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்த நாடாகவும் வங்குரோத்து அடைந்த நாடாகவும் அறிவித்தமை சட்டவிரோதமான செயல்பாடாகுமென ஆளுங்கட்சியின் ஆதர வாளரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.**

**மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் சில அதிகாரிகள் தொடர்பில் அரசாங்கம் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்பதுடன், புலனாய்வுத்துறையினர் இது தொடர்பில் விசா ரணைகளை நடத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

பொருளாதார வீழ்ச்சி குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட குழுவில் கருத்துக்களை முன்வைக்கும் போதே பாராளுமன்ற உறுப்பி னர் வஜிர அபேவர்தன இவ் வாறு கூறியுள்ளார்.

கடந்த வருடம் ஏப்ரலில் இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக பிரகடனப்படுத்தப் பட்டமை அரசியலமைப்புக்கு முரணானது எனவும் அவர் சுட் டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி சீனாவுக்கு 70 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டி யிருந்தது. அதை செலுத்த டிசம் பர் வரை கால அவகாசம் இருந் தது

2022 இல் செலுத்த வேண் டிய மொத்தக் கடன் 7.2 பில்லி யன் டொலர்களாகுத். ஏப்ரல் மாதத்திற்குள் மூன்று பில்லியன் (3.2) டொலர்கள் செலுத்தப் பட்டிருந்தது.



இந்நிலையில், அவசர அவச ரமாக நிதியமைச்சர் இராஜி னாமா செய்தார். மத்திய வங்கி யின் ஆளுநர் பதவி விலகுகினார். இதற்கிடையில், வெளிநாட்டில் இருந்த ஒருவர் வரவழைக்கப் பட்டு மத்திய வங்கியின் ஆளுந ராக நியமிக்கப்பட்டார்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட வர் நாட்டை திவாலான நாடாக அறிவித்தார். அது அவ ரது கடமையல்ல. ஆனால், அத னையே அவர் செய்துள் ளார்.

நாடு திவாலானதாக அறி விக்கப்பட்ட தருணத்தில் எந் தெந்த நபர்கள் இருந்தார்கள் என்பதை பாராளுமன்றக் குழு கண்டறிய வேண்டும்.

அவர்களின் குழந்தைகள் சிறப்பு இடங்களில் பலன் பெற் றுள்ளார்களா என்பதை கண்ட றிய வேண்டும்.

ஒரு சிலரின் விருப்பத்திற்கு அடிபணிந்து 70 மில்லியன் டொலர்களுக்கு நாட்டை திவா லானதாக அறிவிப்பது எந்த வகையிலும் நியாயம் அல்ல.

மத்திய வங்கியிலும் நிதிய மைச்சிலும் உள்ளவர்களை அர சாங்கம் மிகவும் கவனமாகப் பார்க்க வேண்டும். புலனாய்வு துறையினர் இவர்களை விசா ரிக்க வேண்டும்.

சுமார் 100 மக்கள் பிரதிநிதி களின் வீடுகள் எரிக்கப்பட்டி ருந்தன. இதற்கு முக்கிய கார ணம் நாடு திவாலானதாக அறி விக்கப்பட்டமையே ஆகும்.

7.2 பில்லியனில் 3.2 பில்லி யன் கடனை செலுத்தி நாட்டை திவாலானதாக அறிவித்தது அரசியலமைப்புச் சட்டத்தை மீறும் செயலாகும்-என்றார்.

(அ)

# இலங்கையில் கார்களின் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, செப். 19

உள்நாட்டு சந்தையில் வாக னங்களின் விலை மேலும் அதிக ரித்துள்ளது.

குறிப்பாக கார்களின் விலை கடந்த மாதத்தைவிட கணிச மாக உயர்ந்துள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் தெரிவிக் கின்றனர்.

பொதுப் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் வாகனங் களை இறக்குமதி செய்ய அரசாங் கம் அனுமதித்துள்ளபோதிலும், தனியார் வாகனங்களின் இறக்கு மதிக்கு அனுமதி அளிக்கப்படா மையால் மீண்டும் வாகனங்க ளின் விலைகள் உயர்வடைந்து வருவதாக வாகன இறக்குமதி யாளர்கள் கூறுகின்றனர்.

இந்நிலைமை தொடருமா னால் வாகனங்களின் விலை மேலும் அதிகரிக்கலாம் என வும் அவர்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

கடந்த மாதம் முதல் சில பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தியுள்ளது.

வாகனங்கள் இறக்குமதிக் கான கட்டுப்பாடுகள் கடந்த இரண்டு வருடங்களாக அமுல் அள்ளது. என்றாலும், தற்போது பொது போக்குவரத்துக்கான வாகங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி அளித்துள் ளது.

எரிபொருளுக்கான கியூ. ஆர் முறை கடந்த முதலாம் திகதிமு தல் நீக்கப்பட்டதன் பின்னர் வாகனங்களுக்கான தேவை அதி கரித்துள்ளது.

குறிப்பாக கார்களுக்கான தேவை அதிகரித்துள்ளதால் இவ்வாறு விலைகள் அதிகரித்து வருவதாக வானக இறக்குமதி யாளர்கள் கூறுகின்றனர். (அ)

# திருடிய மகனுக்கு உதவிய தாய்!

கொழும்பு, செப். 19

ஜாஎல பகுதியில் வாகனங் களை கொள்ளையிட்டு வந்த தாய் மற்றும் மகன் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

இவர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களால் கொள்ளையிடப் பட்டதாக தெரிவிக்கப்படும் ஏழு உந்துருளிகள் மற்றும் முச் சக்கர வண்டியொன்றும் கைப் பற்றப்பட்டுள்ளன.

மேலும் சந்தேக நபர் ஒருவ ரிடமிருந்து கைக்குண்டு ஒன் றும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை நீதிமன் றில் முன்னிலைப்படுத்த பொலி ஸார் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர்.

(அ)

# யாழ்ப்பாணம் வந்த கப் வாகனம் விபத்து

## இருவர் படுகாயம்



திருமலை, செப். 19

திருகோணமலை - பன்கு ளம் பகுதியில் கெப் ரக வாக னம் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று திங்கட் கிழமை காலை 6.00 மணியள வில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை - அனுராத புரம் ஏ - 12 வீதியினூடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கெப் ரக வாகனம் பன்குளம் பகுதியில் வைத்து விபத்துக்குள் ளானதில் வாகனத்தில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர்.

குறித்த இருவரும் வேலை யின் நிமிர்த்தம் அம்பாறை -

காரைதீவில் இருந்து யாழ்ப் பாணம் நோக்கி பயணிக்கை யில் சாரதியின் தூக்கம் காரண மாக வாகனம் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ள தாக தெரிய வருகின்றது.

மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற் கொண்டுள்ளனர்.

(அ)

# சுங்கச்சாவடியில் குவிந்துள்ள கையடக்கத் தொலைபேசிகள்

கொழும்பு, செப். 19

போலியான தகவல்களை சமர்ப்பித்து இலங்கைக்கு கடத் திச் செல்லப்பட்ட நிலையில் சுங்க பிரிவினரால் கைப்பற்றப் பட்ட பல இலட்சம் ரூபா பெறு மதியான கையடக்க தொலை பேசிகள் சுங்கச்சாவடியில் குவிக் கப்பட்டுள்ளதாக தெரியவந் துள்ளது.

உலகின் பிரபல நிறுவனங்க ளால் தயாரிக்கப்பட்டுள்ள கையடக்கத் தொலைபேசிகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ள தாக சுங்கத்துறை தெரிவித்துள் ளது.

சில கையடக்கத் தொலை பேசிகளின் பெறுமதி ஐந்து இலட்சம் ரூபா அல்லது அதற் கும் அதிகமாகும் எனவும் தெரி யவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட கையடக் கத் தொலைபேசிகளை சந் தைக்கு விடுவிப்பதற்கு வாய்ப் புள்ளபோதிலும், தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்காத காரணத்தினால், சுங்கச்சாவடிகளில் கையடக்கத் தொலைபேசிகள் அழிக்கப்படு வதாக சுங்கச் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணை யத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில்-

சில சமயங்களில் கைத்தொ லைபேசிகளை கடத்துபவர்க ளுக்கு அபராதம் விதித்து மீளத் தருமாறு சுங்கத்துறை கோருவ தாகவும், இதுபோன்ற செயல்க ளுக்கு தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் துணைபோகாது என்றும் தெரி வித்தார்.

கைப்பற்றப்பட்ட தொலை பேசிகள் குறித்த திறந்த டெண் டர்களுக்கு தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி வழங்கப்படும் என் றும் மூத்த அதிகாரி கூறினார்.

ஆனால் தொலைத்தொ டர்பு ஒழுங்குமுறை ஆணைக்கு ழுவின் அறிக்கையை நிராகரிப் பதாகவும், ஆணைக்குழு முறை யான அனுமதி வழங்கினால் இந்த கையடக்கத் தொலை பேசி கேள்விகோரலை சந்தை யில் சமர்ப்பித்து நாட்டுக்கு பெருமளவு வருமானம் ஈட்ட முடியும் எனவும் சுங்கத்துறை தெரிவித்துள்ளது. (அ)

# பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட கான்ஸ்டபிள் மீது கத்திக்குத்து!

கொழும்பு, செப். 19

நீதவான் ஒருவரின் உத்தி யோகபூர்வ இல்லத்தில் பாது காப்புப் பணியில் ஈடுபட்டி ருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தாக்குதலுக்கு உள்ளா கியுள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

பம்பலப்பிட்டி பொன்சேகா வீதியில், அளுத்கடை இலக்கம் 06 இல் அமைந்துள்ள குறித்த நீதவானின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பொலிஸ் கான்ஸ்ட பிள் ஒருவர் பாதுகாப்புப் பணி யில் ஈடுபட்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், இல்லத்துக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த காரின் கண் ணாடியை கழற்றும் சத்தம் கேட்டு பொலிஸ் கான்ஸ்டபிள் அந்த இடத்திற்குச் சென்றுள் ளார்.

அப்போது அவர்கள் தப்பி யோட முயற்சித்தபோது, அதில் ஒருவரே கத்தியால் பொலிஸ் கான்ஸ்டபிளை சரமாரியாக வெட்டிவிட்டுத் தப்பிச் சென் றுள்ளார்.

இதன்போது கான்ஸ்டபி ளின் வலது கை வெட்டப்பட்ட தாகவும், அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

(அ)

# பொறுப்பு கூறவேண்டியவர்கள் பதவியில்! சுயாதீன விசாரணை எவ்வாறு சாத்தியம்?

## கேள்வி எழுப்புகின்றார் கர்தினால் மல்கம்

கொழும்பு, செப். 19

**சனல் 4 நிறுவனம் வெளியிட்ட ஆவணப்படம் தொடர்பில் ஆராய்வதற்கான குழுக்களை நியமிப்பதும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட குழுக்களைப் போன்று வீண் செயல் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

களுத்துறை புனித மரியாள் தேவாலயத்தில் இடம்பெற்ற ஆராதனை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராயர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமான தரப்பினர் உயர் பதவிகளில் இருக்கும் போது எவ்வாறு சுயாதீன விசாரணைகளை நடத்த முடியும்?

சனல் 4 வெளியிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு தனிக்குழு அமைக்கப்பட்டுள்ள நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னதாக பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு மிகவும் பாரதூரமான பொறுப்பு இருப்பதாக தெரிவுக்குழுவில் அறிக்கையின் 134 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தரப்பினர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்ற போதும், அவர்கள் இன்னும் உயர் பதவிகளில் உள்ளனர்.

இந்த நிலையில், மேலும் குழுக்களை நியமிப்பதில் என்ன பயன்-என்றார்.

(அ)

# பிரிட்டனில் சாலைகளைப் பயன்படுத்தியமைக்கு கட்டணம் செலுத்தாமல் உள்ள இலங்கை தூதரகம்!

கொழும்பு, செப். 19

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள இலங்கை தூதரகம் லண்டனில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சாலைகளை 19 ஆண்டுகளாகப் பயன்படுத்துகிறது.

ஆனால் அந்தக் காலகட்டத்திற்கு செலுத்தவேண்டிய 652,120 பவுண்டுகள் (இலங்கையில் சுமார் 261 கோடி) இதுவரை செலுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கொடுப்பனவுகள் தொடர்பில் அந்நாட்டு அமைச்சர் டேவிட் ரட்லி அந்நாட்டு பாராளுமன்றத்தில் முன்வைத்த பட்டியலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தூதரகம் உட்பட பெருமளவிலான வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் அந்த வீதிகளை பயன்படுத்துகின்ற போதிலும், நாளாந்த கட்டணமான 15 பவுண்ட்ஸ் இதுவரை செலுத்தப்படவில்லை என ரட்லி சுட்டிக்காட்டியுள்ளார்.

லண்டனில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக இந்த கட்டண முறை பிப்ரவரி 2003 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும் கடந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை தூதரகங்கள் மற்றும் அலுவலகங்கள் செலுத்தவேண்டிய மொத்தத் தொகை 145 மில்லியன் பவுண்டுகள் தாண்டியுள்ளதாக ரட்லி கூறியுள்ளார்.

அமெரிக்க தூதரகம் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. அந்த அலுவலகம் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை 14,643,495 பவுண்டுகள் ஆகும்.

(அ)

# ஹரக்கட்டா தப்ப முயன்றமை தொடர்பில் கூட்டு விசாரணை

கொழும்பு, செப். 19

நதுன் சிந்தக எனப்படும் 'ஹரக்கட்டா' தடுப்புக் காவலில் இருந்த போது தப்பிச்செல்ல முயன்ற சம்பவம் தொடர்பில் கூட்டு விசாரணை இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்தூவ தெரிவித்துள்ளார்.



ஹரக்கட்டா தொடர்ந்தும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் குறிப்பிட்டார்.

(அ)

# 1,583 டெங்கு நோயாளர் செப்ரெம்பரில் பதிவு!

கொழும்பு, செப். 19

செப்ரெம்பர் மாதத்தில் இதுவரை நாட்டில் 1,583 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அதன்படி, 2023 ஆம் ஆண்டில் இதுவரை நாட்டில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை நேற்று காலை நிலவரப்படி 63,461 ஆக உள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் கூற்றுப்படி, டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 38 ஆக உள்ளது. இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தலா 13,000 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி 2023ஆம் ஆண்டு மேல் மாகாணத்தில் 30,800 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல்மாகாணத்தில் பாரியளவிலான நோய்த்தொற்றுக்கு மேலதிகமாக கண்டி மாவட்டத்தில் 5,398 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, அதிகளவான டெங்கு நோயாளர்கள் ஜூன் மாதத்தில் பதிவாகியுள்ளனர்.

ஜூன் மாதத்தில் மொத்தம் 9,916 டெங்கு வழக்குகள் பதிவாகியுள்ளன, மே மாதத்தில் 9,696 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு 10 பிரதேசங்களை டெங்கு அபாய வலயங்களாக அறிவித்துள்ளது. கடந்த சில வாரங்களில் இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளபோதிலும், நாட்டின் தென் மேற்குப் பகுதியில் பெய்து வரும் கடும் மழையினால் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கக் கூடும் என டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழித்து சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சுமார் 140 வகையான நுளம்புகள் இருப்பதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

(அ)

# சனல் 4 வீடியோ இப்போது எதற்கு வெளியிடப்பட்டது?

## கேள்வி எழுப்புகிறார் அமைச்சர்

கொழும்பு, செப். 19

சனல் 4 காணொளி தற்சமயம் ஏன் வெளியிடப்பட்டது என்ற கேள்விகள் உள்ளன என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குலுக்கு காரணமானவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த தயங்கப் போவதில்லை.

இந்த அரசாங்கத்தின் கீழ் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளோம். முறையான



விசாரணைகள் மூலமாக மட்டுமே குற்றவாளி யார் என்பதை நிரூபிக்க முடியும்.

குற்றவாளியை கண்டுபிடித்து குற்றவாளியை தண்டிக்கும் பொழுது அரசாங்கம் என்ற ரீதியில் எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்போம்.

சனல் 4 காணொளியின் உண்மை மற்றும் போலி தொடர்பிலும், இந்த நேரத்தில் ஏன் காணொளியை வெளியிட்டுள்ளார்கள் என்பது தொடர்பிலும் பிரச்சினை உள்ளது.

ஜெனிவா மனித உரிமை கூட்டத் தொடர் கூடும்போது, நமது நாட்டுக்கு எதிராக குரல் எழுப்பப்படும் போது ஒரு நாடு என்ற வகையில் எமக்கு தீங்கு விளைவிக்க அனைவரும் ஒன்றிணைந்தால் நாங்கள் அதற்கு எதிரானவர்கள்.

நாங்கள் நாட்டின் பக்கம் உள்ளோம். ஆனால் குற்றவாளிகளின் பக்கம் இல்லை-என்றார்.

(அ)

# ஓசோன் படை பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு யாழில் சிறப்பு நிகழ்ச்சிகள்






யாழ்ப்பாணம், செப். 19

ஓசோன் படை பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு சுதுமலை சிம்மிய பாரதி வித்தியாலயத்தில் நேற்று பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதன்போது வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை முதல்வர் துரைரட்ணம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக புவியில்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.நாகமுத்து பிரதீபராஜா கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் வலிகாமம் கல்வி வலய சுற்றாடல் முன்னோடி வலய ஆணையாளர் ப.அருந்தவம், எதிர்காலத்திற்கான சுற்றுச்சூழல் கழகத் தலைவர் மற்றும் செயலாளர்களான லி.கேதீஸ்வரன், ம.சசிகரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சர்வதேச ஓசோன் படை பாதுகாப்பு தினம் வருடம்தோறும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கடற்கரை வீதியை மறித்து மீனவர்கள் ஆர்ப்பாட்டம்!

## சாய்ந்தமருதில் கடலரிப்புக்கு நடவடிக்கை எடுக்கக் கோரி

அம்பாறை, செப். 19

**நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்ற கடலரிப்புக்கு தீர்வு காணுமாறு சாய்ந்தமருது மீனவர்கள் வீதியை மறித்து போராட்டம் ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.**

**அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் காலநிலை மாற்றம் காரணமாக கடும் கடலரிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றன.**



இதில் சாய்ந்தமருது பகுதி கடற்கரை பகுதி பெரும்பாலும் கடலரிப்பு அதிகமாக இடம்பெற்று வருவதுடன் மீனவர்களும் பல்வேறு சிரமங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இந்த கடலரிப்பு காரணமாக மீனவர்களின் ஓய்வு அறைகள் வாடிகள் பள்ளிவாசல்கள் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

அத்துடன் மீனவர்களின் தோணிகள் வலைகள் கடலரிப்பினால் கடலுக்குள் இழுத்து செல்லப்பட்டுள்ளன.

குறித்த கடலரிப்பைத் தடுப்பதற்காக கரையோரம் பேணல் திணைக்களம் பல்வேறு நடவடிக்கைககளை மேற்கொண்டுள்ளதுடன் பாரிய கற்களும் வெளியிடங்களில் இருந்து கனரக வாகனங்களின் உதவியுடன் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஆனால் இக்கற்கள் தமது மீன்பிடித் தொழிலை பாதிப்புறும் வகையில் போடப்பட்டுள்ளதாகவும் கற்களில் மோதி தமது தோணிகள் உடைந்துள்ளதாகவும் மீனவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

குறித்த போராட்டத்தை சாய்ந்தமருது பொலிஸார் கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததுடன் மீனவர்களுடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டனர்.

(அ)



## பாரிசவாத நோயாளியின் நிறையை படுக்கையுடன் அளவிடக்கூடிய டிஜிற்றல் இயந்திரம் அன்பளிப்பு!

காரைதீவு, செப். 19

பாரிசவாத நோயாளியின் நிறையினை படுக்கையுடன் சேர்த்து அளவிடக்கூடிய டிஜிட்டல் இயந்திரம் ஒன்று கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

குறித்த இயந்திரத்தை லண்டனில் வாழும் இலங்கையைச் சேர்ந்த பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர். காந்தா நிரஞ்சன் , நான்கு இலட்சம் அன்பளிப்பு செய்தார்.

இந்த இயந்திரமானது, பாரிசவாத நோயாளிகளின் நிறையினை படுக்கையுடன் சேர்த்து அளவிடக்கூடியதாகும். அத்துடன் பாரிசவாத நோயாளிகளுக்கு கொடுக்கப்படும் மருந்தின் அளவானது அவர்களின் நிறையினை கருத்தில் கொண்டே கொடுக்கப்படுகிறது.

எனவே,இதன் தேவை கருதி பாரிசவாத சிகிச்சை பிரிவின் விசேட வைத்திய நிபுணர் என். இதயகுமாரின் வேண்டுகோளுக்கு இணங்க வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர். இரா. முரளீஸ்வரனின் ஏற்பாட்டில் இவ் இயந்திரம் அன்பளிப்பு செய்யப்பட்டது.

இக்கையளிப்பு நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ஜே. மதன், பொது வைத்திய நிபுணர்களான என். இதயகுமார் மற்றும் எம். என்.எம்.

சுவைப், தாதிய பரிபாலகி திருமதி எல். சுஜேந்திரன், வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



## வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பு

மட்டக்களப்பு, செப். 19

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

வாழைச்சேனை - நாசிவன்தீவு ஈஸ்ட் லங்கா பொலிசெக் நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.எஸ்.சனூன் என்பவரால் இந்த இயந்திரம் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சிறுநீரக நோயாளிகளின் நலன்கருதி சுமார் 31 இலட்சம் ரூபாய் பெறுமதியான இவ் இயந்திரத்தை அன்பளிப்பு செய்த பணிப்பாளர் ஏ.எஸ். சனூனுக்கு வைத்தியசாலை அத்தியட்சகர் மதன் நன்றிகளை தெரிவித்துள்ளார். (அ)

## மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு!

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள குடிநிலப்பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேக கட்டுபாட்டை மீறி வீதியை விட்டு விலகி மோதியதில் விபத்தில் 21 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடிநிலத்தைச் சேர்ந்த 21 வயதுடைய தர்மராஜா நிதர்சன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளர்.

குறித்த இளைஞன் குடிநிலத்தில் இருந்து சாகாமம் பிரதேசத்திற்கு மோட்டர் சைக்கிளில் பயணித்தார். அந்த பகுதியில் கடும் காற்று வீசியுள்ளது. வேகமாகச் சென்ற மோட்டர் சைக்கிளைக் காற்று தள்ளியபோது வீதியை விட்டுவிலகிக் கல்பாறையுடன் மோதி விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# அதிகாரத்தை உறுதிப்படுத்த வெளியூர், உள்ளூர் சக்திகள் சேர்ந்து செய்த மிகப்பெரிய சூழ்ச்சிதான் ஈஸ்டர் தாக்குதல்!

## ஹரீஸ் எம்.பி. குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, செப். 19

"அண்மையில் வெளியான சனல்-04 காணொளி விடயம் பொய்யாக புனையப்பட்ட விடயமல்ல. அதில் அவிழ்க்கப்படாத இன்னும் பல மர்மங்கள் உள்ளது போன்றே தெரிகிறது. சக்திவாய்ந்த அந்நிய நாடுகளின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே இப்படியான சம்பவங்கள் இலங்கையில் அரங்கேறுகின்றன. இலங்கை முஸ்லிங்களை குறி வைத்து அதிகாரக் கதிரையை நோக்கியதாக முன்னெடுக்கப்பட்ட பெரிய சக்திகளின் பந்தாடலுக்குள் இலங்கை முஸ்லிம் சமூகம் சிக்கிக்கொண்டுள்ளது."

-இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

மருதமுனை மருதூர் கொத்தன் கலையரங்கில் நேற்று இரவு முன் தினம் நடைபெற்ற மருதமுனை பைத்துல் ஹெல்ப் போரிலீப் அமைப்பின் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தெற்காசியாவின் பூகோள அரசியல் போட்டிக்காக இலங்கையின் நிலையை மோசமான சூழ்நிலைக்கு சில சக்திகள் கொண்டுசெல்கின்றன. அமெரிக்க ரஷ்ய பனிப்போரில் சில நாடுகள் சிக்கிக்கொண்டது போல சீன-அமெரிக்க பூகோள அரசியல் போட்டியில் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு கேந்திர நிலையமான இலங்கை மாட்டிக்கொண்டுள்ளது.

இலங்கையில் யார் ஜனாதிபதி, பிரதமர், அரசாங்கம் அமைக்கவேண்டும் என்பதை தீர்மானிப்பது மேற்கத்தேய சக்திகளாகவே இருக்கிறது. அவர்கள் தமது சுயநலனுக்காக சுயாதீனமாக எமது நாட்டை கொண்டுசெல்ல விடமாட்டார்கள். அவர்கள் சரியாக திட்டமிட்டு நாட்டை சீரழிக்க காய் நகர்த்துவார்கள்.

குறிப்பாக சணல் 4 இல் வெளியான காணொளியில் ஆசாத் மௌலானா கூறிய விடயங்களை இலேசில் தட்டிக்கழிக்க முடியாது. அதில் பல உண்மைகள் இருக்கிறது. முஸ்லிம்களை பலிக்கடாவாக்கி முஸ்லிம்கள் மீது பாலி சுமத்தி தங்களுடைய அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்த வெளிநாட்டு சக்திகளும், உள்ளூர் சக்திகளும் சேர்ந்து செய்த மிகப்பெரிய சூழ்ச்சிதான் ஈஸ்டர் தாக்குதல். இதில் முஸ்லிம் சமூகம் பலிக்கடாவாக்கப்பட்டு கிறிஸ்தவ சமூகமும் மோசமாக பாதிக்கப்பட்டது.

அது போன்றே தலைவர் அஷ்ரப்பின் மரணமும் பல மர்மங்கள் நிறைந்ததாக அமைந்துள்ளது. அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடக்க வாய்ப்பிருப்பதனால் பல்வேறு காய்கள் நகர்த்தப்படும். இலங்கையர்களான நாம் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவேண்டும்.

அந்நிய சக்திகளின் பொறியில் மாட்டிக்கொண்ட இலங்கை போலவே வடக்கு கிழக்கில் அதிக முஸ்லிங்களை கொண்ட கேந்திர நிலையமான கல்முனையும் மாட்டிக்கொண்டுள்ளது. இவைகளையெல்லாம் பற்றி சிந்திக்காது கல்முனை நகரில் உள்ள சில மனநோயாளிகள் சம்பந்தமே இல்லாமல் உளறிக் கொண்டிருக்கிறார்கள்.

கல்முனை மாநகரின் மகிமையை பாதுகாக்க மருதமுனையின் பங்களிப்பு அளப்பரியது. இந்த மனநோயாளிகளை பற்றி பேச இந்த இடம் போதாது. இவர்களை பற்றி நிறைய பேச வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் அவர்களை பற்றி பேசலாம் என்று நினைக்கிறேன்.-என்றார்.

# கிம் ஜொங் உன்னின் குண்டு துளைக்காத பச்சைக் கவச ரயில்! உள்ளே உல்லாச வீடு

## நீண்ட நெடும் பயணமாக ரஷ்யா வந்து திரும்பினார்

பியொங்யாங், செப். 19

**குண்டு துளைக்காத பெட்டிகள், குண்டு வெடிப்பைத் தாங்கும் தரை அமைப்பு , செய்மதி தொலைத் தொடர்பு வசதி, அவசரத்துக்குப் பயன்படுத்த ஹெலிகொப்டர், குண்டு துளைக்காத பென்ஸ் கார்கள், தனியான ஆயுதக் களஞ்சியம், மருத்துவர்கள் அணி, காவலர்கள் படை, அலுவலகம், வரவேற்பு மண்டபம், படுக்கை அறை சீனா, ரஷ்யா, கொரியா, ஜப்பான் நாட்டு உணவுகளை ஓடர் செய்து பெறுகின்ற குசினிகள். பிரான்ஸின் பிரபலமான போர்தோ மற்றும் பேர்கண்டி வைன் வகைகள், இளம் பாடகிகள் இவ்வாறு ஏகப்பட்ட வசதிகள், சமாச்சாரங்களுடன் கூடிய விசேட கவச ரயில் பற்றிய கதைகள் மீண்டும் செய்தி ஊடகங்களில் முக்கிய இடம் பிடித்துள்ளன.**

வடகொரியாவின் இளம் அதிபர் கிம் ஜொங் உன் ரஷ்யாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். இந்த வாரம் உலகில் அதிக கவனத்தைப் பெற்ற செய்தியாக அவரது விஜயம் இருக்கின்றது.

வடகொரியாவின் தலைநகராமாகிய பியொங்யாங்கில் இருந்து ரஷ்யாவின் தூர கிழக்குப் பகுதியாகிய விளாடிவொஸ்ரொக்கிற்குத் தனது விசேட ரயிலில் நீண்ட நெடும் பயணமாக வந்து சேர்ந்திருக்கிறார்.

கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளில் கிம் நாட்டை விட்டு வெளிநாடு ஒன்றுக்குச் செல்வது இதுவே முதல் முறை ஆகும்.

வட கொரியாவை ஆண்டுவருகின்ற கிம் பரம்பரையினர் ஏனைய உலகத் தலைவர்களைப் போலன்றித் தங்களது உள்நாட்டு, அயல் நாட்டுப் பயணங்களுக்கு இப்போதும் ரயில் போக்குவரத்தையே பயன்படுத்தி வருகின்றனர். விமானப் பயணங்கள் பாதுகாப்பு உத்தரவாதம் அற்றவை என்ற அச்சத்தின் காரணமாகவே அவர்கள் ரயில் பயணங்களைச் செய்கின்றனர் என்று கூறப்பட்டாலும் அதிபர் கிம் ஜொங் உன் மட்டுமன்றி அவரது தந்தையார் கிம் ஜொங் இல் மற்றும் பேரனாரும் வட கொரியாவின் சிற்பியுமாகிய கிம் இல் சுங் போன்றவர்களும் தங்களது உள்நாட்டுப் பயணங்களுக்கும் எல்லைதாண்டிய விஜயங்களுக்கும் விசேடமாக வடிவமைக்கப்பட்ட கவச ரயில்களையே கடந்த பல தசாப்தங்களாக ஒரு பாரம்பரியம் போன்று தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

கிம் ஜொங் உன்னின் தந்தையார் கிம் ஜொங் இல் 2011 இல் ஒரு ரயில் பயணத்தின் இடைநடுவிலேயே மாரடைப்பினால் உயிரிழந்திருந்தார். இன்றைக்கும் அவரது நினைவுச் சமாதியில் ரயில் ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

கிம் ஜொங் உன் ரஷ்யாவில் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் அவரது விசேட பச்சை ரயிலின் ஆச்சரியமான அம்சங்கள் பற்றிய செய்திகளை சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன. இராணுவ வாகனங்கள் போன்று மூடிய கவச உலோகத்தினால் வடிவமைக்கப்பட்ட அந்த ரயிலின் பெட்டிகளது எடை காரணமாக அதன் வேகம் மணிக்கு 45 கிலோ மீற்றர்களாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதிபர் கிம் மெதுவான பயணங்களை இதமாக ரசிப்பவர் என்று சொல்லப்படுகிறது.

ரஷ்யாவோடும் சீனாவோடும் எல்லையைப் பகிர்ந்துள்ள நாடு வடகொரியா. இந்த விஜயத்தின் போது கிம் தலைநகர் பியொங்யாங்கில் இருந்து ரஷ்யாவின் தூர கிழக்கான விளாடிவொஸ்ரொக்கிற்கு சுமார் ஆயிரத்து 200 கிலோ மீற்றர்கள் தூரத்தைத் தனது பிரத்தியேக ரயிலில் பயணித்துக் கடந்துள்ளார்.





ரஷ்ய விஜயத்தின் போது அவர் வொஸ்ரொச்சினி என்ற இடத்தில் உள்ள ரஷ்யாவின் விண்கலத் துறைமுகத்தில் அதிபர் புடினோடு மிக அந்நியோன்னியமாக நடத்திய சந்திப்பு தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்தது.



விளாடிவொஸ்ரொக்கில் நேற்று சனிக்கிழமை அவர் ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்து அவரோடு ஹிப்பர் சோனிக் ஏவுகணைத் தொகுதிகள் உட்பட நவீன போர் ஆயுதங்களைப் பார்வையிட்டார்.

ஆறு நாள் ரஷ்ய விஜயத்தின் முடிவில் கிம் இன்று ஞாயிற்றுக்கிழமை தனது கவச ரயிலில் தூர கிழக்கில் இருந்து வட கொரியா திரும்பினார். உள்ளூர் ரயில் நிலையம் ஒன்றில் அவரை வழியனுப்பி வைக்க நடந்த நிகழ்வில் இரு நாடுகளது தேசிய கீதங்களும் இசைக்கப்பட்டன. கிம் ஜொங் உன்னுக்கு அந்தப் பிராந்தியத்தின் ஆளுநர் அப்போது ஐந்து வெடிக்கும் ட்ரோன்களையும் , ஒரு உளவு ட்ரோனையும், குண்டு துளைக்காத மேலாடை ஒன்றையும் பரிசாக அளித்துள்ளார். இன்னொரு இடத்தில் வெப்ப அலைக் கமெராக்களில் சிக்காத விதமான விசேட ஆடைகளையும் ரஷ்யா அவருக்குப் பரிசளித்துள்ளது.

(அ)



# வெற்றிகரமாக 'யோகன்-39' ஐ விண்ணில் செலுத்தியது சீனா!

பீஜிங், செப். 19

புதிய ரிமோட் சென்சிங் (தொலை உணர்வு) செயற்கைக் கோளான யோகன் 39-யை நேற்று முன்தினம் சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.

ஜிசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் மார்ச்-2டி கேரியர் ரொக்கெட் மூலம் அந்நாட்டு நேரப்படி நண்பகல் 12:13 மணிக்கு குறித்த விண்கலம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச்செயற்கைக்கோள் திட்டமிட்ட சுற்றுப் பாதையில் வெற்றிகரமாக நுழைந்துள்ளது எனவும், அது நிலம் மற்றும் கடலில் உள்ள பொருட்களை கண்காணித்தல், ஆய்வு செய்தல் மற்றும் அளவிடுதல், அத்துடன் வானிலை முன்னறிவிப்பைக் கண்காணிப்பது உள்ளிட்ட பணிகளில் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# சூடானில் தொடர்கிறது பதற்றம்!



கார்ட்டூம், செப். 19

சூடானின் அரச படையினருக்கும் அந்நாட்டு கிளர்ச்சி குழுக்களுக்கும் இடையிலான மோதலில் சூடானின் தலைநகரமான கார்ட்டூமில் அமைந்துள்ள பல கட்டடங்கள் தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்சமயம் நைல் நதிக்கு அண்மையில் காணப்படும் 18 மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்றில் பாரிய தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 10,000 பேர் வரை உயிரிழந்திருக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் 12 ஆயிரம் பேர் வரை காயமடைந்துள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வன்முறைகள் ஆரம்பித்த தினத்திலிருந்து இதுவரை சுமார் 20 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் அந்நாட்டிலிருந்து ஏனைய நாடுகளுக்கும் இலங்கைக்கும் வெளியேற்றப்பட்டுள்ளனர் என சூடான் தூதரகத்தின் கடமை நேர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், ஏதேனும் சந்தேகம் காணப்பட்டால் சூடானிலுள்ள இலங்கைக்கான அலுவலகத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி விபரங்களை அறிந்துக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார். (அ)

# பிள்ளையானை உடன் பதவி நீக்கவேண்டும்!

## ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு, செப். 19

**“உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணையொன்று இடம் பெற வேண்டுமெனில் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் மற்றும் புலனாய்வு பிரிவு பிரதானி சுரேஷ் சலே ஆகியோர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட வேண்டும்.”**

**-இவ்வாறு ஜே.வி.பியின் நிறைவேற்றுகுழு உறுப்பினரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நளின் ஜயதிஸ்ஸ வலியுறுத்தினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று திட்டமிட்ட அடிப்படையில் ஒரு மணிநேரத்துக்குள் குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. எனினும், விசாரணைகள் சரியான திசையில் செல்லவில்லை. அப்போது பிரதமராக இருந்தவர் தற்போது ஜனாதிபதியாக உள்ளார். எனவே, இனியும் விசாரணை முறையாக நடக்குமா என தெரியவில்லை.

சி.ஐ.டியினர் இதுவரை முன்னெடுத்த விசாரணைகளை அடிப்படையாகக்கொண்டு சுயாதீன விசாரணையொன்று இடம்பெறவேண்டுமெனில் முக்கிய இரு விடயங்கள் இடம் பெறவேண்டும்.

ரணில் ஆட்சியில் இராஜங்க அமைச்சராக உள்ள பிள்ளையான் மீது குற்றச்சாட்டு உள்ளது. எனவே, அவர் பதவி நீக்கப்பட வேண்டும்.

2ஆவது ரணிலின் ஆட்சியின்கீழ் அரச புலனாய்வு பிரிவு பிரதானியாக உள்ள சுரேஷ் சலேயும் பதவியில் இருந்து இடைநிறுத்தப்படவேண்டும்- என்றார்.

(அ)

# கஜேந்திரன் எம்.பி. மீது தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்க!

## சுமந்திரன் வலியுறுத்து

கொழும்பு, செப். 19

“திருகோணமலையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது மிலேச்சத்தனமான முறையில் தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன்பாக நிறுத்த வேண்டும்.”

- இவ்வாறு அரசிடம் வலியுறுத்தியுள்ளார் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்.

திருகோணமலையில் நேற்று முன் தினம் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி மீது தாக்குதல் மேற்கொண்ட சிங்களக் காடையர் கும்பல், அந்த ஊர்தியில் பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதும் கற்கள், கொட்டன்கள் மற்றும் ஹெல்மட் கொண்டு கொடூரமான தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து கருத்து வெளியிடும் போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

“பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது பொலிஸார் முன்னிலையில் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தத் தாக்குதல் நடத்தியவர்களை இலகுவில் அடையாளம் காணும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் மூலம் உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன்பாக நிறுத்துமாறும் வலியுறுத்துகின்றோம்.”- என்றார்.

(அ)

# பதுளையில் புதையல் தேடிய பிக்கு உட்பட எழுவர் கைது!

கொழும்பு, செப். 19

பதுளை, மிகஸ்பிட்டிய கொஹுன பகுதியில் உள்ள நீர் வீழ்ச்சிக்கு அருகில் புதையல் தேடியதாக தேரர் உட்பட 7 பேர் பதுளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து புதிய வகை டிஜிற்றல் ஸ்கேனிங் இயந்திரம் மற்றும் ஏராளமான பூசைப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அம்பலாங்கொட பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் 50 வயதுடைய தேரர் ஒருவரும் மற்றும் கம்பஹா பகுதியைச் சேர்ந்த பூசாரி ஒருவரும் 60. 40 மற்றும் 30 வயதுடைய 4 பேர் மற்றும் 30 மற்றும் 25 வயதுடைய இருவர் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது ஸ்கானிங் இயந்திரம், பற்றரிகள், மந்திர புத்தகங்கள், மண்வெட்டிகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# எம்.பி.யை இலக்கு வைத்து சூடு; விசாரணை சி.ஐ.டிக்கு மாற்றம்!

கொழும்பு, செப். 19

தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் கார் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தொடர்பிலான விசாரணை உடனடியாக அமுலுக்கு வருமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் கார் மீது ஒரு குழுவினர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு 10.35 மணியளவில் அவரின் வீட்டுக்கு முன்பாக இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் வீட்டைவிட்டு வெளியே சென்றுவிட்டு மீண்டும் வீடு திரும்பும்போதே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

காரில் அவர் மட்டுமே இருந்ததாகவும், தாக்குதலில் அவருக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

காரின் இடது பின் இருக்கைப் பகுதியில் இரண்டு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் அனுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்த நிலையில் அந்த விசாரணை தற்போது குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் வீட்டிற்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# பொதுச்செயலர் பதவியை மீண்டும் ஏற்பதற்கு தயார்!

## கூறுகிறார் தயாசிறி ஜயசேகர



கொழும்பு, செப். 19

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி மீள கிடைக்கப்பெறுமானால் அதனை ஏற்பதற்கு தயாராகவே இருக்கின்றேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தயாசிறி ஜயசேகர இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து பொதுச்செயலாளர் பதவியும் பறிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக தயாசிறி ஜயசேகர நீதிமன்றத்தை நாடியுள்ளார். அத்துடன், விரட்டியடித்தால்கூட தான் சுதந்திரக் கட்சியை விட்டுச்செல்லபோவதில்லை எனவும் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் கட்சி தலைவர், பொதுச்செயலாளர் பதவியை மீள வழங்கினால் அதனை ஏற்க தயாரா என எழுப்பட்ட கேள்விக்கு,

“ஆம் நிச்சயம் ஏற்பேன், வழக்கையும் மீளப்பெறுவேன்.” என பதிலளித்தார்.

(அ)

# பகிடிவதைக்கு எதிராக எடுத்த நடவடிக்கை என்ன?

கொழும்பு, செப். 19

சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, பகிடிவதையின் அங்கமாக பெரிய டயர் ஒன்றை கீழே தள்ளிவிட்டதில் முதலாம் ஆண்டு மாணவர் பசிந்து சில்வா தலையில் பலத்த காயம் அடைந்த சம்பவத்தில் தொடர்புடைய மாணவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணை வேந்தருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாணவனுக்கு ஏற்பட்ட காயம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையின்போதே உயர் நீதிமன்றம் இதனை அறிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் திகதி ஒரு புதுமுக மாணவர்கள் வரவேற்பின் பிறகு, பல்கலைக்கழகத்தின் மூத்த மாணவர்கள் குழு ஒரு பெரிய டிராக்டர் ரயரை பல்கலைக்கழக விளையாட்டு மைதான பெவிலியனின் படிக்கட்டுகளில் இருந்து கீழே தள்ளியது.

படிக்கட்டில் ஏறிக்கொண்டிருந்த பசிந்து மீது ரயர் தாக்கியதில் முதலாம் ஆண்டு மாணவன் தலையில் பலத்த காயங்களுடன் படிக்கட்டில் சரிந்தார்.

ராகிங்கின்போது மாணவர்கள் எதிர்கொள்ளும் சம்பவங்களின் தன்மையை தெளிவுபடுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழக மானியக் குழுவுக்கும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுபோன்ற சம்பவங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கம் அளித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு உத்தரவிடப்பட்டது. பல்கலைக்கழகங்களில் இடம்பெற்று வரும் பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒழுக்காற்று குழு சமர்ப்பித்த அறிக்கை தொடர்பில் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

புதிய மாணவர்களை சிரேஷ்ட மாணவர்கள் தாக்கி சித்திரவதை செய்வதாக மனுவுடன் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விடுதிகளில் படிக்கும் பெரும்பாலான மாணவர்கள் இத்தகைய துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனுவில் பிரதிவாதிகள் உதவி கோரியிருப்பதால் அது தொடர்பான விடயங்களை பரிசீலிக்க கால அவகாசம் தேவைப்படுவதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் உத்தரவின்படி அறிக்கைகளை சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்குமாறு அவர் நீதிமன்றத்திடம் கோரினார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், ஒக்ரோபர் 11ஆம் திகதி வரை அவகாசமளித்து, வழக்கை ஒத்திவைத்தது.

(அ)

## ஈஸ்டர்..

தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்துமாறே எதிர்க்கட்சி கோருவதாகவும் தெரிவித்தார்.

இங்கு உண்மையை மறைப்பதுஎன்பதிலிருந்து கைகளில் இரத்தம் தோய்ந்த நபர்களின் சதியோ என்று சந்தேகம் எழுகிறது. இந்த தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இங்கு உண்மை மறைக்கப்படுவது மாத்திரம் இடம் பெற்றுள்ளதால் அரசியல் சாதகங்களைப் பொருட்படுத்தாமல், முழுமையான உண்மையை இங்கு வெளிக்கொணர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான பிரதான சூத்திரதாரிகளையும் ஏனைய காரணத்தை கண்டுபிடித்து சம்பந்தப்பட்ட அனைவரையும் தண்டிப்பதாக அளித்த வாக்குறுதிகளின் பிரகாரமே ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் கோட்டாபய ஜனாதிபதிக்கு 69 இலட்சம் மக்கள் ஆணை கிடைத்தாலும், அவர் அந்த உண்மையைத் தேடாது, உண்மையைக் கண்டறியாமல் பயங்கரவாத செயலை விசாரித்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் பலரையும் அந்த நடவடிக்கைகளில் இருந்து நீக்கினார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு செயற்பாடுகளை பார்க்கும் போது உண்மையை தேடுவதை விட உண்மை மறைக்கப்பட்டுள்ளதையே மேற்கொண்டுள்ளதாக தோன்றுகிறது. இதன் காரணமாக உண்மையைக் கண்டறியும் பொறுப்பைக் கூட ஜனாதிபதி கோட்டாபய புறக்கணித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபயவைப் பின்பற்றி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான உண்மையை தற்போதைய அரசும் மறைத்து வருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நேர்மையான, நம்பகமான, பக்கச்சார்பற்ற தேசிய விசாரணையை விரும்பினாலும், கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களைப் பார்க்கும்போது, தேசிய விசாரணைகளில் அதிக நம்பிக்கை இல்லை. இவ்வாறான நிலையில் சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும்-என்றார். (அ)

## யாழ். போதனா...

தற்போது, நோயாளிகளின் பராமரிப்புக்குத் தேவையான அவசர சந்திப்புகள், மற்றும் நோயாளர் பற்றிய நிலைமைகளை மருத்துவர்களை தொலைபேசி வழியாக தொடர்பு கொண்டே தெரிவிக்கின்றனர். இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொள்ளாமல் தன்னிச்சையான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கைபேசிகளின் பயன்பாடு சிகிச்சையின் குறுக்கீட்டிற்கு ஒரு காரணமாக இருந்தால், அது தாதியர்களை போலவே மருத்துவர்களுக்கும் பொருந்தும். தாதியரை மட்டும் குறிவைப்பது தெளிவாக நியாயமற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் எடுத்த தீர்மானத்தை இடைநிறுத்துவதற்கு உடனடியாக பணிப்புரை வழங்க வேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன் என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில், வவுனியா பொது வைத்தியசாலையில் நடந்த குழறுபடி, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரத்தை தொடர்ந்து, தாதியர்களை குறிவைத்து விதிக்கப்பட்டுள்ள இந்த கட்டுப்பாடு பல தரப்பிலும் விமர்சனத்தை கிளப்பியிருந்தது.

சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரத்தில் தனியார் வைத்தியசாலையின் பங்கு, மருத்துவர்களின் கடமை தவறல் போன்றவற்றை மூடி மறைத்து, தாதியர்களின் தலையில் தவறை சுமத்த முயல்வதாகவும் விமர்சனம் கிளம்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கனடா கண்டனம்...

நினைவேந்தல் பேரணியில் பொலிஸார் முன்னிலையில் குழுவொன்று இந்த தாக்குதலை நடத்தியிருந்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த பேரணியில் திலீபனின் உருவப்படத்தை ஏற்றிச் சென்ற வாகனம் குழு ஒன்றினால் சுற்றிவளைக்கப்பட்டது.

இந்த தாக்குதலை கண்டித்துள்ள கனடிய அமைச்சர் ஹறி ஆனந்தசங்கரி தாக்குதலின்போது பொலிஸார் வேடிக்கை பார்த்ததாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

“சட்டத்தை வெட்கமின்றி மீறுபவர்கள் அனுபவிக்கும் தொடர்ச்சியான தண்டனையற்ற சுதந்திரத்தை” இந்த சம்பவம் எடுத்து காட்டுவதாகவும் கனேடிய அமைச்சர் ஹறி ஆனந்தசங்கரி தமது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுக்காதமை ஏமாற்றமளிப்பதாக கனடிய பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாஹிட் தெரிவித்துள்ளார். அனைவருக்கும் சட்டத்தின் ஆட்சி சமமானதாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## அமெ. ஜனாதி...

78 ஆவது கூட்டத்தொடருக்கு இணையாக செப்ரெம்பர் இன்று நடைபெறவுள்ள, 2030 ஆம் ஆண்டிற்கான மாற்றம் மற்றும் விரைவான நடவடிக்கைகள் என்பவற்றுக்காக உலக தலைவர்களினால் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும் 2023 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உச்சி மாநாட்டின் அரச தலைவர்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

மேலும், அன்று ஜனாதிபதி, உச்சி மாநாட்டில் பங்கேற்கும் பல அரச தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதுடன், கடல்சார் நாடுகளுக்கான ஆசிய-பசுபிக் தீவு நாடுகள் கலந்துரையாடலிலும் பங்கெற்கவுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உட்பட பல தலைவர்களுடன் உத்தியோகபூர்வமற்ற சந்திப்புகளை ஜனாதிபதி நடத்த உள்ளதாக அரச தரப்பு செய்தி தெரிவிக்கின்றன.

இந்த சந்திப்பில் இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான உறவுகள் மற்றும் வர்த்தக உறவுகள் குறித்து ஜனாதிபதி கலந்துரையாடுவார் என்றும் அறிய முடிகிறது. (அ)

## தாக்குதலில்...

நல்லிணக்கம் பற்றி பேசிக் கொண்டிருக்கும்போது, இப்படியான சம்பவங்கள் நடப்பதன் பின்னணி சந்தேகத்திற்குரியது. அரசாங்கம் கூறும் நல்லிணக்க முயற்சிகள் உண்மையாக மேற்கொள்ளப்படுமாயின், இந்த ஆபத்தான கலாசாரத்தை உருவாக்க முயன்றவர்கள் முழுமையான சட்ட நடவடிக்கைக்கு ஒள்ளாக்கப்பட்டு, தண்டனை வழங்கப்படவேண்டும்-என்றார். (அ)

## கஜேந்திரன்...

குற்றவாளிகளை கைது செய்யுங்கள் என சட்டம், ஒழுங்கு துறை அமைச்சர் டிரான் அலசிடம் கோரியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சர் டிரான் அலஸ் அப்படியே தான் செய்வதாக என்னிடம் உறுதியளித்தார். இதுபற்றி தற்சமயம் சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தனவுக்கும் தொலைபேசியில் நான் தொடர்புற்று அறிவித்தேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (அ)

# 30 மாணவர்கள் சுகயீனம்

கொழும்பு, செப். 19

இரத்தினபுரி பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் 30 மாணவர்கள் சுகவீனமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உணவு விஷமானதன் காரணமாக குறித்த பாடசாலை மாணவர்கள் மாவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி, திகன பிரதேசத்தில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மீண்டும் திரும்பிக் கொண்டிருந்த போது ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுமார் 30 மாணவர்கள் இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனரென வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் மாணவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# காடையர்கள் அட்டகாசம் சிறிதரன் எம்.பி. கண்டனம்!

கொழும்பு, செப். 19

தியாகி திலீபனின் நினைவூர்தி மீதான தாக்குதல், இனவாதத்தின் உக்கிரத்தையே வெளிப்படுத்துகிறது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தியாகதீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய நினைவேந்தல் ஊர்தி மீது, திருகோணமலை கப்பற்துறையருகே சிங்களக் காடையர்கள் மேற்கொண்டுள்ள மிலேச்சத்தனமான தாக்குதல், இந்த நாட்டில் இனவாதத் தீ நீறுபூத்த நெருப்பாகவே இன்னமும் கனன்றெரிகிறது என்பதை இன்னுமொரு முறை நிரூபணம் செய்திருக்கிறது.

இரு நாட்டு அரசுகளின் கவனத்தையும் ஈழத்தமிழர்களுக்கான அடிப்படை நியாயத்தையும் கோரி 36 ஆண்டுகளின் முன்னர் அகிம்சைப் போராட்டம் நடத்திய, திலீபன் என்கிற தியாகியின் உருவப்படத்துக்கும், அதைத்தாங்கிய ஊர்திக்கும், அவ்வூர்தியோடு இணைந்து பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்கும் இந்த நிலை என்றால், எந்தவித நியாயப்பாடுகளுமற்று இத்தனை ஆவேசமாய் இனவாதத்தைக் கக்கும் சிங்களவர்களோடு, இந்த நாட்டில் தமிழர்கள் இணைந்து வாழ்வது எத்தனை தூரம் சாத்தியமானது என்பது பற்றி, இனிமேலேனும் சர்வதேச சமூகம் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

ஜெனிவா அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சமநேரத்தில், தமிழர்களையும், அவர்களது போரியல் நியாயத்தையும், இனத்துக்காக நிகழ்த்தப்பட்ட தியாகத்தையும் காலில் போட்டு மிதித்து, தங்களது அடக்குமுறை மனோபாவத்தை சிங்கக்கொடிகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ள சிங்களக் காடையர்களது செயல் கடும் கண்டனத்துக்குரியது. தமிழர்களது உணர்வுநிலைகள் குறித்தும், அவர்களது சுயாதீன உரித்துகள் குறித்தும் எப்போதும் கள்ளமௌனம் காக்கும் ஆட்சி அதிகாரபீடங்கள், இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என நாம் துளியும் எதிர்பார்க்கவில்லை.

இருந்தபோதும், ஒரு சுதேசிய இனத்தின் அடிப்படை உணர்வுநிலைகளை வலிந்து சீண்டி, இரு இனங்களுக்கு இடையிலான முரண்நிலைகளை மீண்டும் மீண்டும் கொதிநிலைக்குத் தள்ளி அரசியல் லாபம் ஈட்டும் சக்திகள் இனங்காணப்பட வேண்டும். ஈழத்தமிழர்களது தன்னாட்சி கோரிக்கை நியாயபூர்வமானது என்ற செய்தியை சர்வதேச சமூகத்தின் செவிகளில் அறைகூவல் செய்வதற்கு இந்தச் சம்பவம் ஓர் சாட்சியமாய் அமைந்திருக்கிறது. இதன் விளைவென்பது, எமது மக்களிடத்தே இனம் குறித்த ஓர்மத்தை தணியாது தகிக்கச் செய்துகொண்டே இருக்கும் என்பதை சிங்களவர்களும் உணரும் காலமொன்று உருவாகியே தீரும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயணப் பையிலிருந்து மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டது

கொழும்பு, செப். 19

கடந்த 15 ஆம் திகதி சீதுவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிடிகொட பிரதேசத்தில் தடுகங் ஓயா கரையில் நீல நிற பயணப்பையில் அடைக்கப்பட்டு, வீசப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மாரவில பிரதேசத்தில் வசிக்கும் போலி வேலைவாய்ப்பு முகவர் என குற்றம் சாட்டப்பட்ட நபரே சடலமாக மீட்கப்பட்டதாக சீதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் பல்வேறு நாடுகளுக்கு வேலைக்கு அனுப்புவதாகக் கூறி பலரிடம் பெருமளவு பணத்தை மோசடி செய்தவர் என விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாக சீதுவ பொலிஸார் கூறினர்.

இவர் மீது பல பொலிஸ் நிலையங்களில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி, பெருமளவானவர்களை ஏமாற்றிப் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார். பின்னர், பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்று தலைமறைவாக வாழ்ந்துள்ளார். பயணப்பையில் அடைக்கப்பட்டிருந்த சடலத்தின் தலை மற்றும் பல இடங்களில் பலத்த காயங்களுடன் காணப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் உள்ளது. (அ)

## கஜேந்திரன் எம். பி...

அடுத்து கைது செய்யப்பட்ட ஆறு பேரில் இரண்டு பெண்கள் அடங்குவதாகவும், இவர்கள் 35 இற்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக ஆறு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# திலீபன் நினைவு ஊர்திக்கு பாதுகாப்பு வழங்க உத்தரவு

## பொலிஸாரின் மனு நிராகரிப்பு

வவுனியா, செப். 19

**தியாகி திலீபனின் நினைவேந்தல் ஊர்தி வவுனியாவில் பயணிப்பதற்கு பொலிஸார் தடை கோரி வவுனியா நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தபோதும், நீதிமன்றம் அதனை நிராகரித்து, குழப்பங்கள் ஏற்படாத வகையில் பொலிஸ் பாதுகாப்பை வழங்குமாறு நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.**

தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியினால் "திலீபன் வழியில் வருகின்றோம்" என்னும் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்டு, திருகோணமலையில் வலம் வந்தபோது சிங்கள இனத்தைச் சேர்ந்த குழு ஒன்றினால் தாக்கப்பட்ட நிலையில் வவுனியாவை வந்தடைந்தது.

குறித்த ஊர்திப் பவனி வவுனியாவில் இடம்பெற்றால் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுவதுடன், இன நல்லுறவு சீர்குலையும் என இருவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய இவ் ஊர்திப் பவனிக்கு பொலிஸார் வவுனியா நீதிமன்றில் தடை உத்தரவு கோரியிருந்தனர்.

அதனை கவனத்தில் எடுத்த மன்று, இறந்தவர்களை நினைவு கூரும் உரிமை அனைவருக்கும் உள்ளது என்பதை சுட்டிக் காட்டி, பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்ததுடன், இன முரண்பாடுகள் மற்றும் குழப்பங்கள் ஏற்படாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.(அ)



# தியாக தீபம் திலீபனின் 4ஆம் நாள் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தியாக தீபம் திலீபனின் உண்ணாவிரத போராட்டத்தின் நான்காம் நாள் நினைவேந்தல் பல்கலைக்கழக பிரதான வளாக பொதுத் தூபியில் மாணவர்களால் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் தலைமையில் மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர் ஆர்.கஜன் வழிகாட்டலில் நேற்றைய நினைவேந்தல்கள் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன.

பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள்,கல்விசாரா ஆளணியினர் எனப் பலரும் இதில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கஜேந்திரன் எம்.பி. தாக்கப்பட்டமையை கண்டித்து புதுக்குடியிருப்பில் போராட்டம்

முல்லைத்தீவு, செப். 19

திருகோணமலையில் தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீதும் பாராளுமன்ற உறுப்பினர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையைக் கண்டித்து முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு , தேவிபுரம் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முற்பகல் 11 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் தேவிபுரம், வள்ளிபுனம் கிராம மக்கள் முதன்மை வீதியில் ஒன்றுகூடி கையில் பதாகைகளை தாங்கியவாறு, மக்கள் எதிர்ப்பு கோஷங்களை வெளிப்படுத்தி வள்ளிபுனம் சந்தி வரை சென்று அங்கு கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தியது மாத்திரமல்ல பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியமை கண்டனத்துக்குரியது என்றும் சர்வதேச விசாரணை வேண்டுமென வலியுறுத்தியும் அவர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை தமிழரின் தலைநகர் தியாகி திலீபன் அகிம்சையின் அடையாளம், தமிழ் மக்கள் தமது



தாயக மண்ணில் இறந்தவர்களை வழிபடத் தடைதானா?, போராடுவோம் போராடுவோம்!! தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுவோம், ஐ.நா சபையே? தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் உங்கள் கண்களுக்கு தெரியவில்லையா?, வடக்கு-கிழக்கு தமிழரின் தாயக பூமி, நிறுத்து நிறுத்து! அடாவடியை நிறுத்து போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பதாகைகளை தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (அ)

# இலங்கை அணியின் தோல்வியில் அரசியல்?

## விசாரணைகள் வேண்டும் என்கிறது சஜித் அணி




கொழும்பு, செப். 19

ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை தோல்வியடைந்ததில் அரசியல் உள்ளதா என ஆராயுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆசியக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி படுதோல்வியடைந்தது. வெறும் 51 ஓட்டங்களை மாத்திரமே இலங்கை அணி பெற்றிருந்ததுடன், இதுவொரு வரலாற்றுத் தோல்வியாக பதிவாகியுள்ளது.

இலங்கையின் இந்த மோசமான தோல்வி குறித்து பிரபல கிரிக்கெட் ஜாம்பவான்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள திஸ்ஸ அத்தநாயக்க-

இலங்கையின் தோல்வியானது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு பிறந்தநாள் பரிசாக இருந்ததா?

ஒரு தீவிரமான போட்டியை அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால், அது அவ்வாறு இல்லை. போட்டி சில மணிநேரங்களில் முடிந்தது.

தோல்வியை நான் விவரிக்க விரும்பவில்லை. ஏனெனில் இது எங்கள் வீரர்களின் மன உறுதியை பாதிக்கும். எனினும், தோல்வியில் ஏதேனும் அரசியல் உள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இலங்கை சந்தித்த தோல்வியால் நாங்கள் மிகுந்த ஏமாற்றமும் வருத்தமும் அடைந்துள்ளோம்-என்றார்.

விசாரணையை மேற்கொள்ளும் பொறுப்பு விளையாட்டுத்துறை அமைச்சிடம் வழங்கப்படவேண்டுமா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

சமீபத்தில், விளையாட்டு அமைச்சின் அதிகாரிகள் பொதுக் கணக்குக் குழுவான கோபாவின் முன்னிலைக்கு அழைக்கப்பட்டனர்.

இதுபோன்ற சூழ்நிலையில் ஆசியக்கிண்ணத் தோல்வி குறித்து விளையாட்டு அமைச்சு விசாரணை நடத்த முடியுமா? -என்றார். (அ)

# கொரியாவில் இலங்கையருக்கு வேலைவாய்ப்புகள் அதிகரிப்பு

கொழும்பு, செப். 19

கொரிய நாட்டில் இலங்கை தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டை அதிகரிக்க தாம் எதிர்பார்ப்பதாக கொரிய குடியரசின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் லீ ஜங்-ஸிக் தெரிவித்தார்.

கொரிய குடியரசின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் லீ ஜங்-ஸிக் தலைமையிலான தூதுக்குழுவினருக்கும், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கும் இடையிலான சந்திப்பொன்று பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போதே லீ ஜங்-ஸிக் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

"தற்போதைய பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களுக்கு அமைய கொரிய வேலைவாய்ப்பு அனுமதி முறையில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் மூலம் இலங்கை தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டை அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம்.விசேடமாக இந்த மறுசீரமைப்பின் ஊடாக இலங்கைக்கான வாய்ப்புக்களைப் பல்வேறு கைத்தொழில் துறைகளுக்கும் விசேட சேவைத் துறைக்கும் விரிவுபடுத்த எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன், இலங்கையர்களுக்கு கொரிய மொழியை கற்பிப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் உட்பட கொரியாவின் ஏனைய ஒத்துழைப்பு வேலைத்திட்டங்களை தொடர்வதற்கு நாங்கள் எதிர்



பார்க்கின்றோம்" எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கொரியாவிலுள்ள இலங்கை தொழிலாளர்களால் இலங்கை பொருளாதாரத்துக்கு அதிகளவு பலனளிப்பதாகவும், இலங்கை பணியாளர்களுக்குப் பல்வேறு வேலைவாய்ப்புத் துறைகளில் பணியாற்றுவதற்கு அதிக சந்தர்ப்பம் வழங்குமாறும்,கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் இலங்கைக்குத் தொடர்ந்தும் வழங்கிவரும் உதவிகளுக்கு நன்றி எனவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 7ஆவது தடவையாக உலக சாதனையை புதுப்பித்தார் சுவீடனின் டுப்லான்டிஸ்



நியூயோர்க், செப். 19

ஐக்கிய அமெரிக்காவின் இயூஜின், ஒரிகொன் ஹேவோட் பீல்ட் விளையாட்டரங்கில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற வொண்டா டயமண்ட் லீக் இறுதிச்சுற்றின் ஆண்களுக்கான கோலூன்றி பாய்தலில் 6.23 மீற்றர் உயரம் தாவி சுவீடன் வீரர் ஆர்மண்ட் டுப்லான்டிஸ் உலக சாதனை நிலைநாட்டினார்.

ஒரு வருடத்துக்கு முன்னர் இதே மைதானத்தில் தனது முதலாவது சிரேஷ்ட உலக வெற்றியை மொண்டோ என அழைக்கப்படும் டுப்லான்டிஸ் ஈட்டியிருந்தார்.

6.23 மீற்றர் உயரத்தை ஒரே தடவையில் தாவிய டுப்லான்டிஸ், தனது சொந்த உலக சாதனையை 7ஆவது தடவையாக புதுப்பித்து வரலாறு படைத்தார்.

இந்தப் போட்டியில் முதலாவது முயற்சில் 5.62 மீற்றர் உயரத்தைத் தாவிய டுப்லான்டிஸ் அதன் பின்னர், 5.72 மீற்றர், 5.82 மீற்றர் ஆகிய உயரங்களை இலகுவாக தாவி முடித்தார்.

5.92 மீற்றர் உயரத்திற்கு விடுகை கொடுக்க தீர்மானித்த டுப்லான்டிஸ் 6.02 மீற்றர் உயரத்தை சிரமம் இன்றி தாவி அப் போட்டியில் முதலாம் இடத்தை உறுதி செய்தார். இது அவர் தாவிய 73ஆவது 6 மீற்றரை விட உயரமான பெறுதியாகும்.

அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. கோலூன்றிப் பாய்தலுக்கான குறுக்குக் கம்பம் 6.23 மீற்றர் உயரத்தில் வைக்கப்பட்டது.

க்ளமொன்ட் ஃபெரொண்ட் அரங்கில் கடந்த பெப்ரவரி மாதம் டுப்லான்டிஸ் நிலைநாட்டியிருந்த உலக சாதனையை விட இது ஒரு சென்ரிமீற்றர் கூடிய தாகும். ஆனால், அந்த உயரத்தையும் டுப்லான்டிஸ் தாவி இரசிகர்களை பிரமிப்பில் ஆழ்த்தினார்.

இரசிகர்களின் ஆரவாரங்களுக்கு மத்தியில் கோலுடன் ஓடிய டுப்லான்டிஸ், கிடங்கில் கோலை ஊன்றி உயரே சென்று தாவிய போது 6.23 மீற்றர் உயரத்தில் இருந்த குறுக்குக் கம்பம் ஆடாமல் அசையாமல் அப்படியே இருந்தது.

அதன் மூலம் டுப்லான்டிஸ் தனது உலக சாதனையை 7ஆவது தடவையாக புதுப்பித்துக்கொண்டார்.

# வக்கார் யூனிஸின் சாதனையை முறியடித்தார் இந்தியாவின் சிராஜ்

கொழும்பு, செப். 19

இலங்கைக்கு எதிரான ஆசியக் கோப்பை இறுதிப் போட்டியில் 21 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை வீழ்த்தி ஒருநாள் போட்டிகளில் தனது சிறப்பான பந்துவீச்சை பதிவு செய்தார் முகமது சிராஜ். மேலும் ஆசியக் கோப்பை போட்டியில் வக்கார் யூனிஸின் சிறப்பான பந்துவீச்சையும் (26 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்கள்) முந்தினார்.

ஒருநாள் போட்டிகளில் சிறப்பான பந்துவீச்சு வரிசை யில் முதல் இடத்தில் ஸ்டுவேர்ட் பின்னியும் (6 விக்கெட்க ளுக்கு 4 ஓட்டங்கள்), 2-வது இடத்தில் அனில் கும்ப்ளே வும் (6விக்கெட்களுக்கு 12 ஓட்டங்கள்), 3ஆவது இடத்தில் ஜஸ்பிரீத் பும்ராவும் (6 விக்கெட்களுக்கு 19 ஓட்டங்கள்), 4-வது இடத்தில் முகமது சிராஜும் (6விக்கெட்களுக்கு 21 ஓட்டங்கள்) உள்ளனர்.

அதுமட்டுமல்லாமல் ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி வீரர்களின் சிறப்பான பந்துவீச்சு வரிசையில் 4-வது இடத்தையும் சிராஜ் பிடித்துள்ளார். ஒரே ஓவரில் 4 விக்கெட்களை வீழ்த்திய முதல் இந்திய பந்து வீச்சாளர் என்ற பெருமையை சிராஜ் பெற்றுள்ளார்.

மேலும், ஒருநாள் தொடர்களில் இந்திய அணிக்காக (2002-ம் ஆண்டு முதல்) முதல் 10 ஓவர்களில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய வேகப்பந்து வீச்சாளர்கள் வரிசையில் சிராஜ் முதலிடத்தில் உள்ளார். முதல் 10 ஓவர்களில் 5 விக்கெட்டை வீழ்த்தியுள்ளார் சிராஜ். இதற்கு அடுத்த இடங்களில் நாத், புவனேஸ்வர், பும்ரா, சிராஜ் ஆகியோர் உள்ளனர். இவர்கள் முதல் 10 ஓவர்களில் 4 விக்கெட்களை வீழ்த்தியிருந்தனர்.

இந்தப் போட்டியில் பந்துவீச்சில் பல சாதனைகளை படைத்துள்ள சிராஜ், இலங்கை அணியை வீழ்த்திய தோடு, அணிக்கு கோப்பையையும் வென்றது.

# ஆஸிக்கு எதிரான தொடரில் இந்திய அணியில் அஸ்வின்




மும்பை, செப். 19

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இரண்டு போட்டிகளுக்கு கே.எல். ராகுல் இந்திய அணியை வழிநடத்த உள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக் கான இரண்டு வெவ்வேறு அணிகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைமை தேர்வுக்குழு தலைவர் அஜித் அகர்கர் மற்றும் இந்திய கேப்டன் ரோகித் சர்மா ஆகியோர் இணைந்து அறிவித்தனர்.

இதன்படி, ரோகித் சர்மா, விராட் கோலி மற்றும் ஹார்திக் பாண்ட்யா ஆகியோருக்கு முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளில் ஓய்வளிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் இந்திய அணி முழு பலம் வாய்ந்த அணி யாக களமிறங்குகிறது. ரவிச்சந்திரன் அஸ்வின் இந்திய அணியில் இடம்பெற்றுள்ளார். முதல் இரு போட்டி களில் கே.எல்.ராகுல் இந்திய அணியின் தலைவராகவும் ரவீந்திர ஜடேஜா உப தலைவராகவும் செயல்படுவார் கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் இரண்டு ஒருநாள் போட்டிக்கான இந்திய அணி: கே.எல்.ராகுல் (தலைவர்), ரவீந்திர ஜடேஜா (உபதலைவர்), ருதுராஜ் கெய்க்வாட், ஷூப்மன் கில், ஷ்ரேயாஸ் ஐயர், சூர்யகுமார் யாதவ், திலக் வர்மா, இஷான் கிஷன் (விக்கெட் காப்பாளர்), ஷர்துல் தாக்கூர், வாஷிங்டன் சுந்தர், ஆர் அஸ்வின், ஜஸ்பிரித் பும்ரா, முகமது ஷமி, முகமது சிராஜ், பிரசித் கிருஷ்ணா.

கடைசி ஒருநாள் போட்டிக்கான இந்திய அணி: ரோகித் சர்மா (அணித்தலைவர்), ஹார்திக் பாண்ட்யா (உபதலைவர்), ஷூப்மன் கில், விராட் கோலி, ஷ்ரேயாஸ் ஐயர், சூர்யகுமார் யாதவ், கேஎல் ராகுல், இஷான் கிஷன், ரவீந்திர ஜடேஜா, ஷர்துல் தாகூர், அக்சர் பட்டேல் (உடற்தகுதியை பொறுத்து), வாஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ், ஆர் அஷ்வின், ஜஸ்பிரித் பும்ரா, முகமது ஷமி, முகமது சிராஜ்.

# ஆஸி - இந்திய அணிகள் இடையேயான ஒருநாள் போட்டி தேவையற்ற தொடராகும்



மும்பை, செப். 19

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடருக்கு முன் இந்திய அணி அவுஸ்திரேலிய அணியுடன் மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்திய அணியின் முடிவை பாகிஸ்தான் முன்னாள் தலைவர் வசிம் அக்ரம் விமர்சனம் செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், "உலகக்கோப்பைக்கு முன்னதாக, இந்தியா அவுஸ்தி ரேலியாவுடன் விளையாடுவது என்பது தேவையற்றது. இந்திய வீரர்களுக்கு இது கூடுதல் சோர்வை தரும். ஆகஸ்ட்டில் இருந்து இந்திய அணி தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்று வருகிறது. உலகக்கோப்பைக்கும் அவுஸ்திரேலிய தொடருக்கும் இடையே இந்திய வீரர்களுக்கு சிறிது நேரமே ஓய்வு எடுக்க வாய்ப்பு இருக்கிறது.

எனவேதான் அவுஸ்திரேலியே தொடரில் இந்திய அணி பங்கேற்பது சிறந்ததாக அமையாது. உலகக் கோப்பை ஆட்டங்களில் விளையாட இந்திய அணி வெவ்வேறு இடங்களுக்கு பயணம் மேற்கொள்ள வேண்டி வரும். பயணம் செய்யவே ஒருநாள் ஆகிவிடும். இதனால் உலகக்கோப்பையில் பங்கேற்ப ஆற்றலுடன் இருப்பது முக்கியம். இப்படியான சூழலில் ஆஸ்திரேலியாவுடன் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுவது ஏன் எனத் தெரியவில்லை" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(ஐ)

# இந்திய எல்லையில் அணு ஆயுதங்களை குவிக்கும் பாகிஸ்தான் : எவ்வளவு தூரம் தாக்கும்?

அமெரிக்காவின் மூத்த அணு விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, பாகிஸ்தானிடம் தற்போது மொத் தம் 170 அணு ஆயுதங்கள் உள்ளன. அவை அந்நாட்டின் முக்கிய இராணுவ தளங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த வேகத்தில் பாகிஸ்தான் தனது அணு ஆயுத கையிருப்பைத் தொடர்ந்து அதிகரித்தால், 2025-ம் ஆண்டுக்குள் அந்நாட்டிடம் இருக்கும் அணு ஆயுதங்க ளின் எண்ணிக்கை 200 ஆக அதிகரிக்கும்.

செப்டம்பர் 11 ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட அணு விஞ்ஞானிகளின் ஆய்வறிக்கை ஒன்றில், அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் குறுகிய மற்றும் நீண்ட தூர ஏவுகணைகள் பாகிஸ்தான் நாட்டின் எந்தெந்த



பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளன என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட ஏவுகணைகள் மற்றும் அவற்றின் ஏவும் திறன்கொண்ட லாஞ்சர்கள் ஆகியவை இஸ்லாமாபாத்தின் மேற்கு பகுதியில் கலா சிட்டா தஹார் மலைத்தொடரில் அமைந் துள்ள தேசிய பாதுகாப்பு வளாகத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வளாகம் இரண்டு பகுதிகளைக் கொண்டிருப்ப தாக செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின்றன. ஏவுக ணைகள் மற்றும் ராக்கெட் என்ஜின்கள் வளாகத்தின் மேற்குப் பகுதியில் தயாரிக்கப்பட்டு சோதிக்கப்படுகின் றன.

ஃபட்டா ஜாங்கின் வடகிழக்கு பகுதியில், அந்த ஆயு தங்களை சாலை வழியாக எடுத்துச் செல்வதற்கான வழி வகைகள் உருவாக்கப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஜூன் 2023-ல் எடுக்கப்பட்ட படம் ஒன்று ஒரு வாக னத்தின் அடிச்சட்டத்தைக் காட்டுகிறது. இந்த வாகனம், நாசர், ஷாஹீன்-1ஏ பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் பாபர் க்ரூஸ் ஏவுகணை ஆகியவற்றுக்காக உருவாக்கப் பட்ட சாலையில் அவற்றைக் கொண்டு செல்லப் பயன்ப டுத்தப்படும். அந்த, ஏவுகணையை நிமிர்த்தி வைத்து, ஏவக்கூடிய திறனும் இந்த வாகனத்துக்கு உள்ளது.

**பாலிஸ்டிக் ஏவுகணை**

அணு விஞ்ஞானிகள் அளித்துள்ள ஆய்வறிக்கையின் படி, பாகிஸ்தானிடம் தற்போது அணு ஆயுதம் தாங்கும் திறன் கொண்ட ஆறு ஏவுகணைகள் உடனடியாகப் பயன்படுத்தக் கூடியவையாக உள்ளன.

இதில் குறுகிய தூரம் சென்று தாக்கும் அப்தாலி (ஹாட்ஃப்-2), கஸ்னவி (ஹாட்ஃப்-3), ஷாஹீன்-ஐஃபு (ஹாட்ஃப்-4) மற்றும் நாசர் (ஹாட்ஃப்-9) மற்றும் நடுத்தர தூரம் சென்று தாக்கும் கௌரி (ஹாட்ஃப்-5) மற்றும் ஷாஹீன் (ஹாட்ஃப்-6) ஆகிய ஏவுகணைகள் அடங்கும்.

இரண்டு அணு ஆயுத திறன் கொண்ட பாலிஸ்டிக் ஏவுகணை அமைப்புகள் தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றன - நடுத்தர தூரம் சென்று தாக்கக் கூடிய ஷஹீன்-3 மற்றும் மிர்வெட் ஆபில் ஆகியவையே அவை.

2021-ம் ஆண்டு பாகிஸ்தான் தின அணிவகுப்பில் அப்தாலி, கௌரி, ஷஹீன்-2 மற்றும் அபாபில் தவிர அனைத்து அணுசக்தி திறன் கொண்ட ஏவுகணைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



நாசர், கௌரி, ஷாஹீன்-1யு ஆகியவற்றுடன் பாபர்-1யு மற்றும் ராட்-2 ஆகியவை 2022 ஆம் ஆண்டின் பாகிஸ் தான் தின அணிவகுப்பில் காட்சிப்படுத்தப்பட்டன. கடந்த இருபது ஆண்டுகளில், சாலையில் பயணிக்கக் கூடிய பாலிஸ்டிக் ஏவுகணைகளுக்கான லாஞ்சர்கள் தயாரிப்பில் பெரிய அளவில் வளர்ச்சியும், விரிவாக்கமும் ஏற்பட்டுள்ளது.

**அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் ஏவுகணைகள் எத்தனை இடங்களில் உள்ளன?**

இந்திய எல்லைக்கு அருகே நிறுவப்பட்டுள்ள 4 அல் லது 5 குறுகிய தூர ஏவுகணைகள் (பாபர், கஸ்னவி, ஷாஹீன்-1, நஸ்ர்) உட்பட பாகிஸ்தான் முழுவதும் 8-9 ஏவுகணை தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் அணு விஞ்ஞானிகளின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாட்டின் உள்பகுதியில் உள்ள ராணுவ தளங்களில் நடுத்தர தொலைவு சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகள் (ஷாஹீன்-2 மற்றும் கௌரி) வைக்கப்பட்டுள்ளன. இது போல் 3 அல்லது 4 ராணுவ தளங்கள் உள்ளன.

அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட



ஏவுகணைகளுக்கு பாகிஸ்தானிடம் எத்தனை தளங்கள் உள்ளன என்பதை உறுதியாக கூற முடியாது என அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட குறைந்தபட்சம் ஐந்து ஏவுகணை தளங்கள் பாகிஸ்தானில் வர்த்தக ரீதியிலான செயற்கைக்கோள்களின் படங்கள் காட்டுகின்றன.

ஆனால், 2016ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்த ஆயுதங் களின் எண்ணிக்கையில் பெரிய அளவில் மாற்றம் இல்லை என்று ஆய்வறிக்கை கூறுகிறது.

இந்த ஐந்து ஏவுகணை தளங்களின் பட்டியலைப் பார்ப்போம்.

**அக்ரோ ராணுவ தளம்**

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ள ஹைதரா பாத்தில் இருந்து வடக்கே 18 கிலோமீட்டர் தொலைவி லும், இந்திய எல்லையில் இருந்து 145 கிலோமீட்டர் தொலைவிலும் அக்ரோ ராணுவ தளம் அமைந்துள்ளது. இங்கு ஆறு ஏவுகணை கேரேஜ்கள் உள்ளன. அவை 12 ஏவுகணைகளுக்காக கட்டப்பட்டுள்ளன.

இந்த ராணுவ தளத்தின் விரிவாக்கம் 2004 முதல் நடந்து வருகிறது. செயற்கைக்கோள் படங்களில் காணப் படும் வாகனங்களை பகுப்பாய்வு செய்யும் போது, சாலை வழியாக ஏவுகணைகளைக் கொண்டு செல்லும் திறனுடைய ஐந்து-அச்சு லாஞ்சர்கள், பாபர் க்ரூஸ் ஏவு கணை ஆயுத அமைப்புக்கானவை என்பதைக் காட்டுகி றது.

பாபரின் க்ரூஸ் ஏவுகணையின் வீச்சு திறன் 450 முதல் 700 கிலோ மீட்டர்கள் ஆகும். கடலுக்கு அடியில் இருந்து ஏவுவதற்கான ஏவுகணையையும் பாகிஸ்தான் தயாரித்து வருகிறது.

**குஜ்ரன்வாலா ராணுவ தளம்**

குஜர்வாலா ராணுவ தளம் பாகிஸ்தானின் மிகப்பெ ரிய ராணுவ வளாகமாக உள்ளது. இது பஞ்சாப் மாகா ணத்தின் வடகிழக்கு பகுதியில் 30 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பரவியுள்ளது.

இந்திய எல்லையில் இருந்து அதன் தூரம் 60 கிலோ மீட்டர் ஆகும்.

செயற்கைக்கோள் படங்களில் காணப்படும் ஏவுகணை லாஞ்சர்கள், அவை குறுகிய தூரம் சென்று தாக்கக்கூடிய நாசர் ஏவுகணைகளுக்கானவை என்பதைக் காட்டுகின் றன. நாசர் ஏவுகணை 60 கிலோ மீட்டர் தொலைவுக்குச் சென்று தாக்கக்கூடியதாக உள்ளது.

**இட்சி ஏவுகணை தளம்**

இந்த ஏவுகணை தளம் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள சக்கருக்கு மேற்கே 220 கிலோமீட்டர் தொலை வில் உள்ளது. இந்திய எல்லையில் இருந்து வெகு தொலை




வில் அமைந்துள்ள ஏவுகணை தளங்களில் இதுவும் ஒன் றாக உள்ளது.

அக்ரோவைப் போலவே இங்கும் அணு ஆயுதங்களை சேமித்து வைக்க நிலத்தடி கிடங்குகள் கட்டப்பட்டுள் ளன.

செயற்கைக்கோள் படங்களில் காணப்படும் ஏவுக ணைகள் இவை அணு ஆயுத திறன் கொண்ட கௌரி அல்லது ஷாஹீன்-2 ஏவுகணைக்கானவை என்பதைக் காட்டுகின்றன.

**பனோ அகில் ஏவுகணை தளம்**

சிந்து மாகாணத்தில் இந்திய எல்லையில் இருந்து 60 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்த ராணுவ தளத்தில் லாஞ்சர்களின் கேரேஜ்கள் மற்றும் வால்கள் தெரிகின்றன.

இவை பாபர் மற்றும் ஷாஹீன்-1 ஏவுகணைகளுக்கா னவை என்பதை இந்தப் படங்கள் காட்டுகின்றன.

**சர்கோதா ஏவுகணை தளம்**

1983 மற்றும் 1990 க்கு இடையில், பாகிஸ்தான் தனது அணுசக்தி திட்டத்திற்காக கிரானா மலையில் அமைந் துள்ள இந்த பெரிய வளாகத்தை பயன்படுத்தியது.

இந்த ஏவுகணை தளம், சாலைவழியாக ஏவுகணை களை எடுத்துச் சென்று, அவற்றை நிமிர்த்தி தாக்கும் வல்லமை பெற்ற 10 கேரேஜ்கள் மற்றும் வேறு வகையான இரண்டு கேரேஜ்கள் பராமரிப்புக்காக பயன்படுத்தப்படு கிறது.

**தரை மற்றும் கடலில் இருந்து ஏவும்வகையிலான ஏவுகணைகள்**

பாபர் (ஹட்ஃப்-7) என்பது அமெரிக்காவின் டோமா ஹாக் ஏவுகணையைப் போன்றது. அதன் வேகம் ஒலியை விட குறைவாக இருக்கும். இது கடலில் இருந்து ஏவப்ப டும் குரூஸ் ஏவுகணையாகும்.

தரையில் இருந்து ஏவக்கூடிய பாபர்-1 ஏவுகணை யின் வீச்சு 600 முதல் 700 கிலோ மீட்டர்கள் ஆகும். இருப்பினும், அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் அதன் வரம்பை 350 கிலோமீட்டர்களாக மதிப்பிட்டுள்ளன.

பாபர்-2- 700 கிலோ மீட்டர் சென்று தாக்கவல்லது என்று பாகிஸ்தான் கூறுகிறது. பாபர்-3 க்கும் அதே வீச்சு உள்ளது. ஆனால் இது கடலில் இருந்து ஏவப்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

பாபர்-3 பாகிஸ்தானின் காள், பாண்டா மற்றும் நரங்



ஆகிய மூன்று நீர்மூழ்கிக் கப்பல்களுடன் பொருத்தப் பட்டிருக்கும். புதிய நீர்மூழ்கிக் கப்பல்களை அனுப்புவ தில் தாமதம் ஏற்பட்டாலும், அவற்றில் அணு ஆயுதம் ஏந்திய பாபர்-3 ஏவுகணைகளை நிலைநிறுத்த முடியும்.

இதனுடன், பாபர் க்ரூஸ் ஏவுகணையின் மற்றொரு வடிவமான ஹர்பாவை பாகிஸ்தான் உருவாக்கி வரு கிறது. இது 2022 இல் போர்க் கப்பல்களிலும் பயன்ப டுத்தப்பட்டது.

பாகிஸ்தான் செய்தித் தொடர்பாளர், ஹர்பாவை அனைத்து வானிலையையும் சமாளிக்கும் திறன் கொண்ட சப்சோனிக்(ஒலியைவிடக் குறைவான வேகத்தில் செல் லக்கூடிய) ஏவுகணை என்று வர்ணித்துள்ளார். இது 290 கிலோ மீட்டர் தொலைவுக்குச் சென்று தாக்கும் திறன் பெற்றது.

# இந்தியாவுக்கு அதிர்ச்சி தந்த கனடா: ஜி20 மாநாட்டில் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு என்ன நடந்தது?

ஜி-20 மாநாட்டில் பங்கேற்பதற்காக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்தியா வந்திருந்தார். மற்ற உலகத் தலைவர்களைப் போலவே அவரும் ஞாயிற்றுக்கிழமை தாயகம் திரும்ப திட்டமிட்டிருந்தார். ஆனால் விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அவர் டில்லியில் இருந்து செவ்வாய்க் கிழமை மதியம்தான் புறப்பட முடிந்தது.

ட்ரூடோவின் இந்தப் பயணம் 'சிரமங்கள்' நிறைந்தது என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறது. ஒருபுறம் இந்தியாவில் அவர் மீது அதிக கவனம் செலுத்தப்படவில்லை. மறுபுறம் கனடாவிலும் அவர் கண்டனங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

அவரது சுற்றுப்பயணம் "ஒரு தோல்வி" என்றும் "வெட்கக்கேடானது" என்றும் கனடாவின் ஊடகங்கள் கூறுகின்றன.



பிரதமரான பிறகு 2018 இல் அவர் மேற்கொண்ட 'தோல்விகரமான' இந்திய சுற்றுப்பயணத்தையும் கனடாவின் ஊடகங்கள் நினைவுபடுத்தின. அப்போது அவர் 'குற்றம் நிரூபணமான பயங்கரவாதியை' தன்னுடன் இரவு விருந்துக்கு அழைத்திருந்தார்.

ஜி20 மாநாட்டின் போது அமெரிக்க அதிபர் பைடன், ட்ரூடோவின் முகத்தை நோக்கி விரலைக் காட்டுவது போன்ற ஒரு படம் பற்றியும் கனடாவில் விவாதிக்கப்படுகிறது.

இந்தப்படத்தில், ட்ரூடோவோ, அமெரிக்க அதிபரோ மகிழ்ச்சியாக காணப்படவில்லை. மேலும் பைடன், ட்ரூடோவுக்கு 'பாடம் கற்பிப்பது" போல் அதில் காணப்படுகிறார்.

அதிகாரபூர்வ வாழ்த்து பறிமாற்றத்தின் போது பிரதமர் நரேந்திர மோடி ட்ரூடோவை சந்தித்தபோது, கைகுலுக்கியவாறே ட்ரூடோ தனது கைகளை விடுவித்துக் கொள்வதுபோல காணப்பட்டது. இந்த படம் இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் தொடர்ந்து நிலவி வரும் 'பதற்றத்தை" பிரதிபலிப்பதாகவும் பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து ட்ரூடோவிடம் கேட்டபோது சிரித்துக் கொண்டே இந்தக்கேள்விக்கு பதில் சொல்வதை தவிர்க்க முயன்றார். ஆனால் விஷயம் 'இது மட்டும் இல்லை" என்று கனடிய ஊடகங்களில் கூறப்பட்டு வருகிறது.

### மோசமடையும் பொருளாதார உறவுகள்

இந்தியா தற்போது உலகின் நான்காவது பெரிய பொருளாதாரமாகவும் உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாகவும் உள்ளது.

சுமார் நான்கு கோடி மக்கள் தொகை கொண்ட கனடாவின் பொருளாதாரமும் உலகின் முதல் பத்து பொருளாதாரங்களில் இடம்பெற்றுள்ளது. இந்தியாவை ஒப்பிடும்போது கனடாவின் பரப்பளவு இந்தியாவை விட 204 சதவிகிம் பெரியதாக இருந்தாலும், கனடாவின் மக்கள் தொகை இந்தியாவை விட மிகக் குறைவு.




இந்தியாவுடனான கனடாவின் வளர்ந்து வரும் தூதாண்மை இடைவெளி குறித்தும் கனேடிய ஊடகங்களில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

'இந்தோ-பஸிஃபிக் பிராந்தியத்திற்கான புதிய உத்தியை நாம் அறிவித்திருந்தாலும், பிராந்தியத்தின் இரண்டு பெரிய பொருளாதாரங்களான இந்தியா மற்றும் சீனாவிலிருந்து நாம் முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம்," என்று டொராண்டோ சன் குறிப்பிட்டுள்ளது.

ஏராளமான இந்திய சீக்கியர்களும் கனடாவில் வாழ்கின்றனர். கனடாவின் உள்நாட்டு அரசியலில் சீக்கிய மக்கள் கணிசமான செல்வாக்கைக் கொண்டுள்ளனர். உள்நாட்டு அரசியலின் காரணமாக ட்ரூடோ இந்தியாவிடமிருந்து விலகிச் செல்கிறார் என்று நம்பப்படுகிறது.

"இந்தியாவின் பொருளாதாரம் நம்மை விட இரண்டு மடங்கு பெரியது. அவர்களின் மக்கள் தொகை 140 கோடி. நம்மைக்காட்டிலும் இது மிக அதிகம். எனவே கனடாவுக்குத்தான் இந்தியாவின் தேவை அதிகமாக உள்ளது," என்று டொராண்டோ சன் தனது கட்டுரையில் கூறியுள்ளது.

இரு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திலும் பெரிய வித்தியாசம் உள்ளது. கனடாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 1.5 சதவிகிதமாக உள்ளது. அது 1.4 சதவிகிதமாக குறையவும் வாய்ப்புகள் உள்ளன. அதே நேரத்தில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 5.9 சதவிகிதமாக உள்ளது. மேலும் அது அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பும் வெளியாகியுள்ளது.

'தொழில்நுட்ப கோளாறு' காரணமாக ட்ரூடோ டில்லியில் தங்க வேண்டி வந்தது அவருக்கு மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தியது. திங்கள்கிழமையன்று டில்லி லலித் ஹோட்டலில் தான் தங்கியிருந்த அறையை விட்டு அவர் வெளியே வரவே இல்லை என்பதிலிருந்தே அதை தெரிந்து கொள்ள முடிகிறது.

டில்லி வந்திருந்த ஜஸ்டின் ட்ரூடோவிடம் இந்தியா மிகுந்த நட்பு பாவத்துடன் நடந்து கொள்ளாதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

ட்ரூடோவின் ஆட்சியின் போது கனடா, இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை எந்த விளக்கமும் அளிக்காமல் திடீரென நிறுத்தி



அதிர்ச்சி தந்தது.

ட்ரூடோ ஏன் இந்த நடவடிக்கையை எடுத்தார் என்ற கேள்வி எழுந்துள்ளது. ட்ரூடோ கருத்தியல் ரீதியாக நரேந்திர மோடிக்கு எதிரானவர் என்று கனடிய ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

"துரதிர்ஷ்டவசமாக மோடியின் உள்நாட்டுக் கொள்கைகள் தனது சொந்த அரசியல் எதிர்காலத்தை பாதிக்கும் என்று ட்ரூடோ கருதுகிறார். அவர் மோடியிடமிருந்து தூரத்தை பராமரிப்பது மட்டுமல்லாமல் அவருக்கு தனது அதிருப்தியை தெரிவிக்கவும் விரும்புகிறார்," என்று டொராண்டோ சன் தெரிவித்துள்ளது.

இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடாததற்காக பிரதமர் ட்ரூடோ தனது சொந்த நாட்டிலேயே கண்டனங்களுக்கு உள்ளானார். கனடாவின் சாஸ்காசேவான் மாகாணத்தின் தலைவர் ஸ்காட் மோயே, இந்தியாவுடனான உறவை ட்ரூடோ கெடுத்து விட்டதாக குற்றம் சாட்டியுள்ளார். மேலும் இந்தியாவு




டனான ஒப்பந்தம் குறித்து ட்ரூடோ மாகாணங்களிடம் தெரிவிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

ட்ரூடோ உள்நாட்டு அரசியல் காரணங்களால் இந்தியாவுடன் பதற்றத்தை அதிகரித்து வருவதாக திங்களன்று வெளியிட்ட கடிதத்தில் ஸ்காட் மோயே கூறியுள்ளார்.

சாஸ்காசேவான் மாகாணம் தனது ஏற்றுமதியின் நாற்பது சதவிகிதத்தை இந்தியாவுக்கு அனுப்புகிறது. இரு நாடுகளுக்கும் இடையே அதிகரித்து வரும் பதற்றம் இங்குள்ள பொருளாதாரத்தை பாதித்துள்ளது.

### 'காலிஸ்தான் இயக்கம்' பற்றிய கருத்து வேறுபாடு

இந்தியாவிற்கு வெளியே உலகிலேயே மிக அதிக



எண்ணிக்கையிலான சீக்கிய மக்கள் கனடாவில்தான் வாழ்கின்றனர். விவசாயிகள் இயக்கம் மீதான கடுமையான நிலைப்பாடு உட்பட, மோடி அரசின் பல கொள்கைகள் சீக்கியர்களுக்கு எதிரானவை என்று கனடாவில் கருதப்படுகிறது.

விவசாயிகள் போராட்டத்தின் போது அதை வெளிப்படையாக ஆதரித்த ட்ரூடோ, கருத்து சுதந்திரம் பற்றியும் பேசினார்.

ஜி20 மாநாட்டின் போது இந்தியா, 'காலிஸ்தான் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்' என்று கனடாவிடம் கேட்டுக் கொண்டதும் தலைப்புச் செய்தியாகியுள்ளது.

ட்ரூடோவுடனான சந்திப்பின் போது பிரதமர் நரேநதிர மோடி, கனடாவில் நடந்து வரும் பிரிவினைவாத 'காலிஸ்தானி இயக்கம்' குறித்து பேசியதோடு கூடவே அது தொடர்பான இந்தியாவின் கவலைகளையும் தெரிவித்தார்.

ட்ரூடோவுக்கும் மோதிக்கும் இடையிலான சுருக்கமான சந்திப்பு நிகழ்ந்த அதே நாளில் கனடாவின் வான்கூவரில் உள்ள சீக்கிய சமூகம், இந்தியாவில் இருந்து பஞ்சாப் மாநிலத்தை பிரிப்பது தொடர்பான கருத்து வாக்கெடுப்பை நடத்தியது.

ஜி-20 மாநாட்டின் போது இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் முன்னேற்றம் ஏற்பட பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கை அவசியம் என்று ஜஸ்டின் ட்ரூடோவிடம் நரேந்திர மோடி கூறியதாக இந்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீக்கிய இயக்கம் பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பதாகவும், இந்திய தூதர்களுக்கு எதிராக வன்முறையை தூண்டுவதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ●

# தமிழீழ விடுதலைப் புலிகளை நினைகூர்ந்த கஜேந்திரன் எம். பியை கைது செய்யுங்கள்

## உதயகம்மன்பில சொல்கிறார்



விடுதலை புலிகள் அமைப்பு தொடர்பில் சிங்கள சமூகத்தின் மத்தியில் கோபம், வெறுப்பு காணப்படுவது இயல்பானதே. இவ்வாறான பின்னணியில் விடுதலை புலிகளின் உறுப்பினர் ஒருவரை நினைவுகூரும் வகையில் சிங்களவர்கள் வாழும் பகுதிக்கு ஊர்தி பவனி செல்வது சிங்களவர்களை ஆத்திரத்துக்குள்ளாக்கி இன முரண்பாட்டை ஏற்படுத்தும்.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அரசியலமைப்பை மீறியுள்ளார். ஆகவே உடனடியாக அவர் கைது செய்யப்பட வேண்டும் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் உள்ள பிவிதுரு ஹெல உருமய கட்சி காரியாலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

விடுதலை புலிகள் அமைப்பினரின் நோக்கங்களுக்காக உயிர் தியாகம் செய்த திலீபனை நினைவு கூரும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கிழக்கு மாகாணத்தில் இருந்து வடக்கு மாகாணத்துக்கு ஊர்தி பவனியில் செல்லும் போது சிங்களவர்களால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.

திலீபன் என்பவர் இந்த நாட்டை பிளவுப்படுத்தும் நோக்கத்துடன் செயற்பட்ட விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினர்.

விடுதலை புலிகளின் நோக்கத்துக்காகவே தனது உயிரை திலீபன் தியாகம் செய்தார். விடுதலை புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்தப்பட்டு இந்த நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது.

விடுதலை புலிகள் அமைப்பை பிரதிபலிக்கும் வகையில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்திலான வாகனத்தில் திலீபனின் உருவப்படத்தை வைத்து கிழக்கு மாகாணத்தில் இருந்து வடக்கு மாகாணம் நோக்கி வாகன பவனியில் செல்வதற்கு யார் அனுமதி வழங்கியது.

தடை செய்யப்பட்ட விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினரான திலீபனின் உருவபடத்தை சுமந்து பொது இடத்தில் பகிரங்கமாக செல்வதற்கு அரச அதிகாரி அனுமதி வழங்கியிருந்தால் அவர் அரசியலமைப்பின் 157 (அ) பிரிவை முழுமையாக மீறி பிரிவினைவாதத்துக்கு அனுசரனை வழங்கியுள்ளதாக கருத வேண்டும்.

நாட்டின் அரசியலமைப்பை மீறும் வகையில் அரச அதிகாரி செயற்படுவதற்கு அரசியல்வாதியொருவர் அழுத்தம் பிரயோகித்திருந்தால் உடனடியாக அந்த அரசியல்வாதி கைது செய்யப்பட்டு அரசியலமைப்பின் 157(அ) பிரிவு பாதுகாக்கப்பட வேண்டும்.

சாதாரண சிங்கள சமூகத்தினரை இலக்காக கொண்டு விடுதலை புலிகள் அமைப்பு 300 இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை முன்னெடுத்துள்ளது. பிரிவினைவாத தாக்குதலால் ஒட்டுமொத்த சிங்கள சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளது. சிங்களவர்கள் தமது உறவுகளை இழந்துள்ளார்கள்.

விடுதலை புலிகள் அமைப்பு தொடர்பில் சிங்கள சமூகத்தின் மத்தியில் கோபம், வெறுப்பு காணப்படுவது இயல்பானதே. இவ்வாறான பின்னணியில் விடுதலை புலிகளின் உறுப்பினர் ஒருவரை நினைவுகூரும் வகையில் சிங்களவர்கள் வாழும் பகுதிக்கு ஊர்தி பவனி செல்வது சிங்களவர்களை ஆத்திரத்துக்குள்ளாக்கி இன முரண்பாட்டை ஏற்படுத்தும் ஒரு சூழ்ச்சியாகும்.

2007ஆம் ஆண்டு 57 ஆவது இலக்கத்தின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டத்தின் 3ஆவது பிரிவுக்கு அமைய இனவாத முரண்பாடுகள் தோற்றம் பெறும் வகையில் மக்களை ஆத்திரமூட்டும் வகையில் முன்னெடுக்கும் சகல செயற்பாடுகளும் தண்டனைக்குரிய குற்றமாகும். அத்துடன் அவை பாரதூரமான குற்றச்சாட்டாக கருதப்படுவதால் தான் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் நபருக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்ற நீதிபதிக்கு வழங்கப்படவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அரசியலமைப்பின் 157 (அ) பிரிவை மீறியுள்ளார்,மறுபுறம சர்வதேச அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான சமவாய சட்டத்தின் 3ஆவது பிரிவை மீறியுள்ளார். ஆகவே இவ்விரண்டு காரணிகளையும் முன்னிலைப்படுத்தி அவர் கைது செய்யப்பட வேண்டும்.

இச்சம்பவம் தொடர்பில் எவரும் முறைப்பாடளிக்கவில்லை என அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆகவே பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்கு எதிராக நாங்கள் இன்று பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடளிப்போம் என்றார். (ஐ)

